# தொண்டன்

வரலாற்றுக் கண்கொண்டு நிகழ்காலத்தில் நின்று வருங்காலம் எப்படி இருக்கவேண்டும் என்பதைக் காட்டுவதே பத்திரிகைகளின் பணி.

பக் : 6

திருச்சபையில் நடனத்தையும் ஒரு வழிபாட்டுச் சாதனமாகக் கொண்டுவர வேண்டும்.

பக் : 9

இலக்கியம் பற்றிய இரு கோட்பாடுகள் என்ன ?

பக் : 17

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் ஜீவாவுக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தைக் கொடுப்பதன் மூலம் தன்னையும் பெருமைப்படுத்திக் கொள்ளலாம்.

பக் : 10

கார்த்திகை - 1988 -

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொண்டன்

கார்த்திகை - 1988
மலர்: 20 இதழ்: 09

ஆசிரியர் :
பி. ஜோசப்

இணை ஆசிரியர் :
மலர்வேந்தன்

ஆசிரியர் குழு :
எஸ். லோகநாதன்
ஏ. ஜி. இராஜேந்திரம்

வெளியீடு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
திரி./மட். மறை மாவட்டம்.

தொடர்பு :
சமூகத் தொடர்புகள் நிலையம்,
அ. பெ. எண்: 44,
மட்டக்களப்பு.

SOCIAL COMMUNICATIONS CENTRE
P. O. Box - 44,
BATTICALOA.

விலை :
தனிப்பிரதி ரூபா 4/50
ஆண்டுச் சந்தா ரூபா 50/-

உள்ளே...

| | | |
|---|---|---|
| 1. | உங்களோடு கொஞ்சம் ... | 1 |
| 2. | தொடர் கதை ... | 2 |
| 3. | கவி ஆரம் ... | 5 |
| 4. | பத்திரிகைகளைத் திறனாய்வு | 6 |
| 5. | பரதம் ஆடும் ... | 9 |
| 6. | இலக்கிய அதிர்வுகள் ... | 10 |
| 7. | இளைஞர் அரங்கம் ... | 11 |
| 8. | மாணவர் பக்கம் ... | 14 |
| 9. | இலக்கியம் பற்றிய ... | 17 |
| 10. | சிறுகதை ... | 21 |
| 11. | விவிலியப் புதிர் ... | 25 |
| 12. | சுவைக்கச் சில துளிகள் ... | 27 |

**எழுதுங்கள் !**

கிறீத்தவ - சமூகச் சிந்தனைகளைக் கொண்ட ஆக்கங்களைத் தொண்டன் எதிர்பார்க்கின்றான்,

புதிய சிந்தனைகளுக்கு - புதிய ஆக்க முயற்சிகளுக்குக் களம் அமைத்துக் கொடுக்கத் தொண்டன் காத்திருக்கிறான்.

எழுதுங்கள் ! ஏற்றவையாயின் பிரசுரிப்போம் !

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உங்களோடு கொஞ்சம்......

தாடி பற்றிக்கொண்டு எரியும்போது சுருட்டுக்கு நெருப்புக்கேட்ட கதையாக உள்ளது தேர்தல் பற்றிய அறிவிப்பு. எப்படியாவது தேர்தலை நடத்தியே தீருவோம் என்று கங்கணம் கட்டிக்கொண்டு செயலில் இறங்கியுள்ளது இந்திய அமைதிப்படை.

சமாதான ஒப்பந்தத்தின் ஓர் அங்கமான மாகாணசபைத் தேர்தலை வடக்கிலும் கிழக்கிலும் நடைபெறச் செய்து, சமாதான ஒப்பந்தத்தை அமுல்படுத்தி விட்டோம் என்று பறைசாற்றத் துடியாய்த் துடிக்கின்றது. கொலைகளும் கொள்ளைகளும் கடையடைப்புக்களும் மறியற் போராட்டங்களும் நாடுமுழுவதும் நாளுக்கு நாள் அதிகரித்துவரும் வேளையில் தேர்தலை நடாத்துவது ஜனநாயக வழிமுறையா?

தமிழ் மக்களைப் பொறுத்த வரையில் தேர்தல் ஆயிரம் நடைபெற்றாலும் தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீரப்போவதில்லை.

''நான் ஆட்சிக்கு வந்தால் சமாதான ஒப்பந்தத்தைக் கிழித்தெறிந்து விடுவேன்'' என்று ஒருவரும், ''தேர்தல் முடிந்தவுடன் இந்திய அமைதிப்படையை வெளியேற்றி விடுவேன்'' என்று வேறொருவரும் தேர்தல் விஞ்ஞாபனங்கள் செய்கின்றனர். இவர்களின் கூற்றில் ''தமிழ் மக்களுக்கு விடிவுகாலம் அண்மையில் இல்லை'' என்ற பயங்கர அச்சுறுத்தல் எதிரொலிக்கின்கிறது. இத்தகைய சூழ்நிலையில் தேர்தல்கள் பிரச்சினைகளைக் குறைப்பதற்குப் பதிலாக பிரச்சினைகளை அதிகரிக்கப் போகின்றது என்று கூறினால் சாலப் பொருந்தும்.

சமாதான ஒப்பந்தம் கைச்சாத்திட்ட பொழுது,

''ஆடுவோமே — பள்ளுப் பாடுவோமே;
ஆனந்த சுதந்திரம் அடைந்துவிட்டோமென்று''

அன்று பாரதி பாடியதைப் போன்று ஆடினோம், பாடினோம், மகிழ்ச்சிக்களிப்பில் செய்ய வேண்டியதெல்லாம் செய்தோம். நாம் கொளுத்திய பட்டாசு வெடிச்சத்தம் போன்று அந்த மகிழ்ச்சி நிலைக்கவில்லை. எமக்குக் கிடைத்த நல்ல சந்தர்ப்பத்தைத் தகுந்த முறையில் அவதானத்துடன் அணுகாததால் 'கைக்கு எட்டியது வாய்க்கு எட்டவில்லையே' என்று இன்று அங்கலாய்க்கிறோம்.

''வேலிக்குப் போட்ட முள் காலுக்கு வினையாயிற்று'' என்ற அனுபவத்தில் ஆப்பிழுத்த குரங்கு போல வினையை வலிய வரவழைத்துக்கொண்டு மெல்லவும் முடியாமல், விழுங்கவும் முடியாமல் திண்டாடுகின்றோம்.

இத்தனை கடந்தகால அனுபவங்களையும் மனதில் வைத்துக்கொண்டு தேர்தலை அணுகுவோம். எம்மவரிடையே ஒற்றுமை உருவாகும்வரை, காட்டிக்கொடுக்கும் எட்டப்பர்கள் மறையும்வரை, பழிவாங்கத் துடிக்கும் எண்ணம் ஒழியும்வரை தமிழனுக்கு விடிவு காலம் தேர்தலில் தங்கியில்லை.

- பி. ஜோசப்

---




அவரோடு இறந்தோமானால்
அவரோடு வாழ்வோம்

2 தீமோ. 2/11

# 6



# சந்தனச் சிதறல்கள்

கோகிலா மகேந்திரன்

சூடாத பூவாய், சுவைக்காத நறுந்தேனாய்ப் பல காலம் இருந்துவிட்ட கடல்! ஸ்ரீலங்கா கடற்படையின் கெடுபிடிக்குப் பயந்து எத்தனையோ மாதங்கள் யாரும் கிட்ட நெருங்கமுடியாதிருந்த கடல் என்ற நினைவு அவர்கள் நினைவை மேலும் மகிழ்வுப் படுத்தியது. அந்த மகிழ்வில் கிறிஸ்ரோபர் மட்டுந்தான் கலந்துகொள்ளவில்லை.

அவனுடைய 'ரைம்ரேபிளில்' அன்று கழிவுத் தொகுதி 'ஃபிசியோலஜி செக்சன்' படிக்கும் முறையாம். அதை அன்று தவறவிட்டால் பிறகு எப்போதுமே அதைப் படிக்க நேரம் வராதாம். அதிக நித்திரை விழித்துப் படிப்பது விரைவில் மறந்துவிடுமாம். மாணவர்கள் இப்படிப் பேசிக்கொண்டார்கள். அன்று கிருப்ஸ் 'ரிப்ரொப்' உடையில் வழமையைவிட அழகாக வந்திருந்தான். கடலில் நீந்துவதற்காகச் 'சேட்'டைக் கழற்றிய போது உடம்பு பளபளவென்று மின்னியது.

வெளிச்சம் எட்டவே முடியாமல்... பல இயற்கை மறைப்புகளைப் போட்டிருந்த சவுக்கு மரங்கள்... இளஞ்சோடிகளுக்குப் பெரிதும் உதவியாய் இருக்கும் என்று நினைத்தபடி அத்தகைய இடம் ஒன்றிற்குச் சென்ற மேரி... அங்கு இரண்டு செண்பகங்கள் மிக உல்லாசமாய் ஒன்றை ஒன்று துரத்திக்கொண்டு ஓடியதைக் கண்டு உளம் மலர்ந்து, சிரித்துக்கொண்டாள். செண்பகச் சோடியுடன் அவள் தனியாய் நின்ற அந்த நிமிஷம்!

திடீரென்று வானமேடையில் மேக ஜதிக்கும் இடியின் நட்டுவாங்கத்திற்கும் மின்னல் நடமாட மழை கரகோஷமாய்க் கொட்டித் தீர்த்தது. எல்லாரும் நனைந்த குறை நனையாத குறையாய் ஓடிவந்து பஸ்ஸில் ஏறிய மனப் பதிவு!

''என்ன பேசாமல் வாறீங்கள்?''

''இல்லை. அண்டைக்கு 'பீச்'சிலை ஸ்பெண்ட் பண்ணின நேரம்பற்றி நினைச்சுக் கொண்டு வந்தனான்...''

''அந்த நேரத்தை நாங்கள் இரண்டுபேரும் எவ்வளவு இனிமையாகக் கழிச்சிருக்கலாம். நீங்கள்தான் ஓம் எண்டு சொல்றீங்கள் இல்லையே?'' அவனது குரலில் மெல்லிய வேதனையும் விரக்தியும் தொனித்தன.

மேரி இதற்குப் பதில் கூறாமலே, ''நளினியின்ரை றூம் கிட்ட வந்திட்டுது. நான் இனிப் போவன். தாங்க்யூ...'' என்று முன்னால் வேகமாக நடந்தாள்.

''அப்ப நான் உள்ளே வர வேண்டாமா?''

''வேண்டாம்''

அவன் திரும்பிச் சைக்கிளில் ஏறிக்கொண்டான். நளினி இருந்த வீட்டின் முற்றத்துப் பிரகாசமான வெளிச்சத்திற்குக் கண் சுருங்கிப் பிறகு மெல்ல மலர்ந்தாள் மேரி.

அவளைக் கண்ட நளினி ''ஆ... நீயே? வா, வா... ஸ்போட்ஸ் பிரக்ரிஸ் முடிஞ்சு தனிய வாறியோ?'' என்று கேட்டாள்.

''இல்லை கிருப்ஸ் வந்தவர்...''

''ஐ...சீ... அப்படியே? பிறகென்ன...? ஓம் எண்டு சொல்லிப்போட்டு எங்களுக்கு 'ஹிச்ட் பாட்டி' வைக்கிறது தானே?'' என்று பலத்த சத்தமாய்ச் சொன்னாள் நளினி.

நளினியின் உரப்பான குரலைக் கேட்டு உள்ளிருந்து வண்ணாத்திப் பூச்சிகள்போல் கிசுகிசுவெனப் புறப்பட்டு வந்த வேறுபல மாணவிகள்,



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''இண்டைக்கு பக்கெற்றிங்... இண்டைக்கு பக்கெற்றிங்தான்...'' என்று கோஷமிட்டனர்.

மேரியின் மனதில் இனம் புரியாத ஒரு குமைச்சல்!

''ஐயோ... அப்பிடி ஒண்டுமில்லையடி நான் இன்னும் ஓமெண்டு சொல்லேல்லை...'' என்று அவள் தயங்குவதற்கிடையில் ஒருத்தி வாளி நிறைய நீர் கொண்டு வந்து முற்றத்தில் வைத்தே தலையில் கொட்டி அபிஷேகம் செய்துவிட்டாள்.

மற்றவர்கள் கைகொட்டி ஆரவாரம் செய்தனர். மேரியின் நிலை பெரிய பரிதாபமாக இருந்தது.

ஒரே மாலைப்பொழுதில் இரண்டாம் முறை சுய கௌரவ அழிவு!

இன்று என்ன தேதி என்று நினைத்துப்பார்த்தாள்! எட்டாந் தேதி... ஒருவேளை அதுதான் காரணமோ? அது காரணமாய் இருக்கமுடியாது என்று அவளது அறிவு மனம் இடித்துரைத்தது.

மனதில் எரியும் கலவை உணர்வுகளின் சூட்டை வார்த்தைகளில் ஏற்ற முடியாத நிலையில் நளினியின் படுக்கையில் போய்த் தொப்பென்று விழுந்தாள் அவள்.

நளினி கூட அவளைப் புரிந்துகொள்ளவில்லை! ஆக... இந்த உலகில் உண்மை நட்பு என்று கூட ஒன்றும் இல்லை... சே!

கொட்டம் அடங்கிய பிறகு நளினி வந்து அவள் அருகில் அமர்ந்தாள்.

நளினியைக் கண்டவுடன் விசித்து விசித்து வெடித்து வெளியே அழுதாள் மேரி. உள்ளே மிகவும் துவண்டு போன அவள் நிலையை அது உணர்த்தியது. கிறிஸ்ரோபர் கொடுத்த அவமான கரமும் ஏமாற்றமுமான பதிலால் ஏற்கெனவே தாக்கப்பட்டிருந்த அவள் இதயம் இதைச் சாட்டாக வைத்துக் கரை உடைந்தது.

''ஏனடி...? ஏன் இப்ப அழுறாய்? உனக்கு இதிலை விருப்பமில்லையே? இதையெல்லாம் சிம்பிள் ஆக எடுக்க மேணுமடி'' என்றாள் நளினி.

''ஏனெண்டு தெரியேல்லை. எனக்கு கிருப்ஸிலை பாவம் எண்ட ஒரு உணர்வுதான் ஏற்படுதே ஒழிய விருப்பம் வருதில்லை. நான் என்ன செய்ய? அதுக்குள்ளை நீங்கள் பக்கெற்றிங் அடிச்சு எல்லாருக்கும் தெரியப் பண்ணிறியள். நாங்கள் இரண்டுபேரும் வேறை வேறை சமயம் எண்டதைக்கூட மறந்து போறியள்....''

# தொடர்கதை

''கருணை தானடி பல சமயங்களிலையும் காதலா மாறுது. நீ ஜெயகாந்தனின்ரை 'கருணையினால் அல்ல' வாசிச்சனியே? அதிலை, அந்த வயது போன நேரத்திலையும் கௌரிக்கு நோயாளியான முதலியாரிலை காதல் வந்ததுக்குக் கருணைதான் காரணம். ஜெயகாந்தன் இல்லையெண்டு தலைப்பிலை சொன்னாலும்கூட அது தான் காரணம் எண்டு நான் நினைக்கிறன்... உனக்கும் அப்பிடி வரும்... கிருப்ஸ் ஒரு நிமிஷத்திலை உன்ரை சமயத்துக்கு மாறிடுவார்... அதைப்பற்றி ஏன் கவலைப்படுகிறாய்? கெற் அப்... யூ சிபார்ஃபுல்...''

என்று கூறி மேரியை உற்சாகப்படுத்தி, அவளை எழுப்பிக்கொண்டு நளினி அடுத்த ரூமுக்குப் போகையில் வெள்ளிகள் சில முளைத்திருந்தன. அந்த அறையில் பல பெண்கள் கூடியதும் பல்கலைக்கழகக் குணமும் புத்துணர்வும் மீண்டும் மீண்டும் முளைவிட்டன.

மழை பெய்த பசுமை உலகெங்கும் வியாபித்து விட்ட உணர்வு எல்லாருக்கும்.

பாடத் தொடங்கிவிட்டனர்!

துக்கத்தின் ஒரு கோடியில் இருந்து குதூகலத்தின் மறுகோடியை உடனே எட்டித் தொட முடிவது பெண்மைக்கே உரிய பாங்கு என்பதை நிரூபிப்பது போல், மேரியும் அவர்கள் குதூகலத்தில் இணைந்து பாடத் தொடங்கிவிட்டாள்.

'றூம் அன்ரி' தன் பருத்த தேகத்தை அசைத்துக் கொண்டு விறுவிறென்று உள்ளே வந்தாள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

''விருந்தை முழுவதும் தண்ணி ஊத்தினியள்... சரி யெண்டு பொறுத்துக்கொண்டன். இப்ப காட்டுக் கத்தல். இதுதான் அண்டைக்கே மாணிக்கவாசகர் பெண்சாதி சொன்னவ... ஆருக்கு அறை குடுத்தாலும் கம்பஸ் குரங்குகளுக்குக் குடுக்காதை மச்சாள் எண்டு. நான் கேட்டிருந்தால் ஏன் இந்தக் கரைச்சல்? நான் பாவங்கள் எண்டு அறை தந்தனுன்... என்ரை தலையைச் செருப்பாலை அடிக்க வேணும்...'' என்று தலையில் அடித்துக்கொண்டு, ஒரு பாட்டம் பெய்து ஒழிந்த பெரு மழை போல் ஒரே மூச்சில் கொட்டித் தீர்த்தாள்.

நாங்கள் விருந்தையிலை தண்ணி ஊத்தேல்லையே; முத்தத்திலையெல்லோ ஊத்தினனுங்கள்...'' என்று அன்ரிக்கு முன்னுல் கூறுகிற தைரியம் ஒருவருக்கும் எழவில்லை.

அவள் யானைபோல் அசைந்து மறுபடியும் உள்ளே சென்ற பின்னர் ''உது மனிசிக்குக் கலியாணம் செய்யாத வருத்தம். வேறை ஒண்டுமில்லை...'' என்று ஒருத்தி மெதுவாகச் சொல்ல மீண்டும் அந்த அறையில் பலத்த சிரிப்பொலி எழுந்தது.

போய்க்கொண்டிருந்த ஆந்தை விழிகள் அனல் கக்கும் கோபத்துடன் திரும்பிப் பார்த்தன.

□ □

எது அழகைக் கொடுக்கிறது? நுனியில் தட்டிவிட்டாற் போன்ற அந்த மூக்கா? ரோஜாவும் சந்தனமுமான அவள் நிறமா? அல்லது சுரைக்காய் மாதிரி அழுத்தமும் சரிவுமாய்த் தெறிக்கும் அந்த உடலா? என்ன இருந்தாலும் மென் சிவப்பு நிற 'நதியா' சாறியில் மேரி மிக அழகாகவே இருந்தாள்.

காலையில் புனித அன்னம்மாள் ஆலயத் திருப்பலிப் பூசைக்குப் போய்வந்தாள். ஏழு மணிக்கு ஆலயத்திலிருந்து திரும்பியதிலிருந்து 'பேர்த்டே' ஆயத்தங்கள் தான்!

மாலை நேரத்தின் மெல்லிய காற்றில் அவள் மேனி சிலிர்த்தது. அவளது பிறந்த தினத்திற்கு, அவளது அழைப்பை ஏற்றுக் கூடப் படிக்கும் மாணவர், மாணவிகள் அனைவருமே வந்திருந்தனர். விரிவுரையாளர்கள் கூடச் சிலர் வந்திருக்கிறுர்கள். குகநாதன் வந்திருக்கிறுர். சிவா வந்திருக்கிறுர். 'அப்ஸ்' என அன்புடன் அழைக்கப்படும் மிஸஸ் அப்பாத்துரை வந்திருக்கிறுர்.

கிறிஸ்ரோபர்... அவன் மட்டும் வரவில்லை. அவன் ஒரு விசித்திரப் பிறவிதான். அவள் அழைப்பிதழ் கொடுக்கப் போனபோதே சொன்னுன். ''இந்த பேர்த்டே... இஞ்சை ஒரு சமயச் சடங்கு போலை மாறிட்டுது... ஒருத்தரும் செய்யாமல் விடலாகாது எண்ட மாதிரி...''

நீங்கள் செய்யேல்லையா?''

''எனக்கு இன்னும் பயித்தியம் பிடிக்கேல்லை...''

''அப்ப, எங்களுக்கெல்லாம் பயித்தியமா? ஆர் வீஓல் மாட்?''

''அதிலையும் சந்தேகமா?'' அவன் 'பொட்டைச் சாரை' மாதிரி 'விர்'ரென்று நடந்தான். அந்த அலட்சியம் அவளை எதுவோ செய்தது. அவன் இன்று வரவில்லை. □

(தொடரும்)

நெப்போலியன் சிறுவயதில் அடிக்கடி நடு இரவில் காணுமல் போய்விடுவார். இப்படி ஒரு முறை நெப்போலியனின் அம்மாவும், அப்பாவும் அவரைத் தேடிச் சென்றபோது அடர்ந்த காட்டுப் பகுதியில் இருந்த ஒரு குட்டையின் அருகே உட்கார்ந்து கொண்டு தண்ணீரையும், அதில் தெரிந்த நிலவையும் இரசித்துக்கொண்டிருந்தார். பையனைக் கண்டுபிடித்த பெற்ருேர் 'உனக்குப் பயமாக இல்லையா? என்று கேட்டபோது ஆறுவயது நெப்போலியன் கூறினுர் 'அப்படி எல்லாம் ஒன்றும் இல்லையே பயம் இந்த வயதில் வரலாமா?'

இந்தத் துணிச்சல்தான் பிற்காலத்தில் உலக நாடுகள் பலவற்றைப் பிடிக்க உதவியது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாழ்க்கை வண்டி

காலமெனுஞ் சக்கரத்தில் சுற்றுதெம் வாழ்க்கைவண்டி
காசினியில் எவ்விடத்தில் முடியும்...? - அது
காவியத்தில் என்னவிதம் படியும்...? - அக்
காலனவன் கணக்குவர கட்டைவண்டி சாய்ந்துவிடும்
கூடவரும் கூட்டங்களும் ஓடும்...! - நம்
காசுபணம் கூடஎன்ன செய்யும்...?

ஓடியாடி உழைத்ததெல்லாம் உதவாமல் பூட்டிவைத்து
ஆண்டியாய் வாழ்ந்தென்ன லாபம்...? - பொருள்
ஆசையால் ஆவிதான் அலையும்...! - நீ
தேடிநிதம் சேர்த்துவைத்த பொருளாலே உன்னுயிரை(த்)
தடுத்துவைக்க எப்படித்தான் முடியும்? - தினம்
தொல்லைதான் வந்துனக்குச் சேரும்!

இன்றிருப்பார் நாளையில்லை என்றயிவ் வாழ்க்கையிலே
ஈயாமற் சேர்ப்பதெல்லாம் பாவம்! - நீ
இறந்தாலும் போவதுடன் நரகம்! - இனி
என்றுவரும் எமக்கழைப்பு என்றுநிதம் நீநினைத்தால்
எந்நாளும் கூடிவருஞ் செல்வம்! - அதை
எண்ணிவிட்டால் இங்குனக்கே சொர்க்கம்!

பெற்ரோரும் மற்ரோரும் இங்குனக்குத் துணையில்லை
பயணத்தில் கூடிவருங் கூட்டம்! - இடை(ப்)
பாதையிலே விட்டுவிட்டு ஓட்டம்! - மறை
கற்ரோரும் மற்ரோரும் சொல்லிவைத்தார் ஏட்டினிலே
மரணமிங் கெம்முடற்கு மட்டும்! - ஒரு
மறைவில்லை எம்முயிர்க்கு என்றும்!

- சிவா பத்மநாதன்

# ஈழமொரு போர்க்களம்?

பெண்கள், பசு முதியவரை
பிரித்தொதுக்கித் தனியாக
அன்றுபோர் நடத்தியதாய்க் கேள்வி - இன்று
அவரைவைத்தே நடத்துகிருர் வேள்வி!

வேலேந்திக் களம்பாய்ந்து
வீரமுடன் போர் செய்தோர்
வேல்மார்பில் பட்டன்றே மாய்ந்தார் - இன்று
வேலைவிட்டு வந்தவரே சாய்ந்தார்!

அம்பு,வில் தேரிழந்து
அன்றெதிரில் நின்றவனை
இன்றுபோய்நாளைவா என்ருர் - இன்று
இருகைக்கும் விலங்கிட்டே கொன்ருர்!

தனியான இடமொன்றை
தெரிந்துநாள் குறிப்பிட்டே
துணிவோடு அன்றுசமர் செய்தார் - இன்று
தூங்குகையில் குண்டுமழை பெய்தார்!

சந்தை, தெரு, சவச்சாலை
சந்துபொந்து எல்லாமே
இந்நாளில் போர்க்களம் நம்முன்னே - ஏன்
ஈழமே போர்க்களம்தான் அண்ணே!

- செ. குணரத்தினம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பத்திரிகைகளைத் திறனாய்வு முறையில் படிப்பது எப்படி?

சமுதாயத்தைப் படைக்கும் பொறுப்பு கொண்டுள்ள சக்தி பொருந்திய சமூகத் தொடர்பு சாதனம் பத்திரிகைகள். அவற்றைப் பற்றிய விளக்கங்கள், விமர்சனங்கள், திறனாய்வுகள் நாளும் வெளிவருகின்றன.

''பத்திரிகைகளுக்குச் சுவையும் ரசமும் நிறைந்த தகவல்களைத் தரவேண்டும் என்ற மன அரிப்புடன், நடக்காத விஷயங்களையும் பொய்யான கிசுகிசுக்களையும் எழுதி அச்சிடத் தயங்காதவர்கள் அநேகர் பத்திரிகை உலகில் இருக்கின்றார்கள். அவர்களுக்கு காப்பியும், குளிர்பானமும், மதுவகையும், பரிசுப்பொருளும் தந்து இலாப நோக்கத்திற்கு ஏற்ப இஷ்டம் போல் எழுதத் தூண்டுகிற சுயநலவாதிகளும் இருக்கிறார்கள்'' பிரபல எழுத்தாளர் வல்லிக்கண்ணனின் உள்ளக் குமுறலால் வெடிக்கும் உண்மைப் பிளம்புகள்.

ஆம், பத்திரிகையாளர்கள் மக்களின் செம்மையில் துளியும் கவலையுறாது தம் 'தொழிலை' நடத்தி வருகின்றார்கள்.

**உள்ளடக்கம் ஒன்று பெயரோ பல**

நம் பத்திரிகைகள் தாங்கிவரும் செய்தி, படங்களை நவீன பேரங்காடியுடன் ஒப்பிடலாம். விரும்பியோருக்கு வேண்டியனவெல்லாம் அங்கு கிடைப்பது போன்று வெவ்வேறு வாசகர்களின் ரசனைக்கு ஏற்ப, தரத்திற்கேற்ப செய்திகளைத் தருகின்றன. சினிமாச் செய்திகளால் உடை பூண்டு, துணுக்கு நடையிட்டு, ஆபாச நெடியுடன் அரசியற் களத்திற்கு வியாபார நோக்கோடு வருவதுதான் இன்றைய இதழ்களின் பொதுவான போக்காகும் இன்னும் ஊடே ஆன்மீகச் செய்திகள், உபந்யாசங்கள், ஜோக்ஸ், கிளுகிளு கதைகள் சிறுகதை, தொடர்கதை என்ற பெயரில் யதார்த்தமற்ற பகுதிகள், இத்யாதி இவைகளே நம் பத்திரிகைகளின் மசாலா பார்முலாக்கள்.

இக்கலாச்சார வியாபாரிகளிடையே கலை இலக்கியத்திற்காக, அரசியற் கல்விக்காக உண்மையிலேயே பணியாற்றும் பத்திரிகைகளும் உள்ளன. கொள்கை, நேர்மையுடைய தனி மனிதன் ஒருவனுக்கு இச்சமூகத்தில் என்ன மதிப்புண்டோ அம்மதிப்புதான் இப்பத்திரிகைகளுக்கும் உண்டு என்பதை மறுக்க இயலாது.

**வாசகர்தான் காரணமா?**

வரலாற்றுக் கண்கொண்டு, நிகழ்காலத்தில் நின்று வருங்காலம் எப்படியிருக்க வேண்டும் என்பதைக் காட்டுவதே பத்திரிகைளின் பணி. இந்த நோக்கத்தினையுணராது, அல்லது உணர மறுத்து சமூகவுணர்வின்றி தரமற்ற படைப்புகளைத் தந்து தரங்கெட்ட வாசகர்களை உருவாக்கிக் கொண்டிருக்கிறார்கள். ''பல்லாயிரக் கணக்கான வாசகர்கள் தரமான விஷயங்களை வாசிக்கமாட்டார்கள் என்று நமது பத்திரிகை ஆசிரியர்களுக்கும், எழுதுபவர்களுக்கும் சொன்னது யார்? வாசகர்கள் எது கிடைக்கிறதோ அதைப் படிக்கிறார்கள். எந்தச் சமுதாயத்திலும் சிலர் தான், சில ஆயிரம் பேர்வழிகள்தான், தரம் தெரிந்து படிக்கத் தெரிந்தவர்கள் இருக்க முடியும்.'' (கா. நா. சுப்ரமணியம்: துக்ளக்)

தரமான கருத்துக்களைச் சொல்லி பத்திரிகை வியாபாரிகள் தாங்கள் கெட்டுக் குட்டிச்சுவராகப் போனமைக்கே வாசகர்கள் தான் காரணம் என்று வாசகர்களைப் பழி சொல்கிறார்கள். எவ்வளவு பெரிய புரட்டல்!

''ஒரே சமயத்தில் சனங்களுடைய காசையும் பறித்து, அவர்களுடைய காசை வைத்தே அவர்களுடைய ரசனையையும் பண்பாட்டையும் கெடுத்துக் குட்டிச்சுவராக்கியது போதாது என்று அவர்கள் மீது அபாண்டமாகக் குற்றமும் சுமத்த வேண்டுமென்றால்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தக் கலாச்சார வியாபாரிகள் எவ்வளவு பெரிய கல்லுளிமங்கன்களாக இருக்கவேண்டும்.'' (துர்வாசர்: 'துக்ளக்)

மேற்கூறிய கருத்துக்கள் பத்திரிகைகளின் அவலத்திற்கு வாசகர்கள் காரணமல்ல என்பதனைத் தெளிவாகக் காட்டும்.

இன்றைய பத்திரிகைகள் தரமானவையோ இல்லையோ மக்கள் படிக்கிறார்கள் என்பது நிதர்சனம். அறிவியல் வளர்ச்சி தந்த வேகமான வாழ்வுடைய யுகமிது! வேதனை, துன்பம், மன உளைச்சல் தரும் இறுக்கத்தினின்று விடுதலை பெற மனிதன் இவைகளை நாடுகிறான். சமூக நலனில் நாட்டங்கொண்ட நல்லோர் ஒருவரின் நற்கருத்து ஏற்படுத்தும் விளைவைவிட, மத குருவின் பிரசங்கம் ஏற்படுத்தும் தாக்கத்தைவிட, குடும்பப் பத்திரிகை என்ற பெயரில் வெளிவரும் நம் சனரஞ்சகப் பத்திரிகைகள் சமயலறை வரை சென்று ஏற்படுத்தும் சலனங்களே பெரிதெனில் மிகையன்று.

வாசிக்கத் தெரிந்தவர்களிடையே இப் பத்திரிகைகள் ஏற்படுத்தும் தாக்கம் பெரிதாயிருப்பதால் இதன் செயற்பாட்டை நாம் எளிதில் புறக்கணித்துவிடல் இயலாது. அமைதி நோக்கிலும், அறிவு நோக்கிலும், பொழுதுபோக்கு நோக்கிலும் படிக்கப் பெறுகின்ற பத்திரிகைகளைத் திறனாய்வு நோக்கில் படித்தல் வேண்டும் என்று எதிர்பார்ப்பது தவறான கண்ணோட்டமெனச் சொன்னாலும், சமூக மாற்றத்தின் கருவியாய் விளங்கிவருகின்ற இச்சாதனத்தை சாதாரணமாக மதிப்பிடக்கூடாது என்பதால் ஓரளவு திறனாய்வு கொண்டே நோக்க வேண்டுவது அவசியமாகும். இதுவரை பார்த்த கருத்துகளும் நம் பத்திரிகைகள் பற்றிய திறனாய்வுக் கருத்தே. எனினும் ஓரளவு அதன் உள்ளடக்கத்தை வகை பிரித்துப் பார்ப்பது நலம் பயக்கும் எனலாம்.

### பத்திரிகைகளின் கரு (Content)

புற்றீசல் போல நாளும் வெளிவந்து கொண்டிருக்கும் பத்திரிகைகளின் வடிவம் (Form) பற்றி நாம் அலசப்போவதில்லை. பொதுவாக இவை வெளிப்படுத்தும் செய்திகளே நம் ஆய்வுப்பொருளாகிறது. அதிலும் அவைகளின் தீய பண்புகள் மட்டுமே இங்கு குறிக்கப்பெறுகிறது.

---

## புதிய நூல்

### "ஒத்தமை நற்செய்தியில் சில கருத்து விளக்கம்"

ஆசிரியர்: அருள்திரு. R. S. லோப்பு அடிகள்

வெளியீடு: மறைக்கல்வி நடுநிலையம், ஆயரகம், மட்டக்களப்பு.

விலை ரூபா 8/-.

---

- ☐ சமூகப் பார்வையின்றி தனிமனிதத் துதி பாடுவது.
- ☐ பாலுணர்வு, சினிமாச் செய்திகளால் மக்களைத் திசை திருப்புதல்.
- ☐ அமைப்புக்களைக் காப்பது.
- ☐ செத்துவிட்ட பழைய மதிப்பீடுகளுக்கு உயிரூட்டுவது.
- ☐ யதார்த்த நிலையை மறக்கச்செய்து, கனவுலகிற்கு இட்டுச்செல்வது.
- ☐ மூளையைப் பேதலிக்கச் செய்வது.

இன்னும் பல அடுக்கிக்கொண்டே போகலாம். இத்தன்மைக்கு மாறான தன்மைகளை எப்பத்திரிகைகள் தன் குணமாகக் கொண்டுள்ளனவோ அவைகளே சமூகப் பிரக்ஞையுள்ள நல்ல பத்திரிகைகளாகும்.

### சமூக அமைப்பு

பத்திரிகைச் செய்திகளைப் புரிந்துகொள்வதற்கு சமூகம் பற்றிய அறிவியல் நோக்குத் தேவை. எத்தகைய சமூக அமைப்பில், யாரால், எந்த நோக்கத்திற்காக, யாரை நோக்கி வெளியிடப்படுகின்றன என்ற கண்ணோட்டம் நமக்குப் புரியுமானால்தான் மேலே கொடுக்கப்பெற்ற ஆறு கருத்துக்களையும் புரிய இயலும்.

வர்க்க அமைப்புடை சமூகம் - 60 விழுக்காடு வறுமைக் கோட்டின் கீழ் - உற்பத்திச் சக்திகள் ஒரு சிலரிடமே உள்ள அமைப்பு. இவ்வமைப்பில் பெரிய மூலதனங்கொண்டு நிறுவப்பெறுகின்ற பத்தி



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ரிகைகள் யாருடையதாய் இருக்கும்? அதனுடைய நோக்கம் எதுவாய் இருக்கும்? ஆலை அதிபர் ஒருவரின் நோக்கம் உற்பத்தியிலும் விற்பனையிலும் அவை தரும் இலாபத்திலும் இருப்பது போலவே, பத்திரிகைத் 'தொழிலின்' நோக்கமும் அதுவாகத்தானே இருக்கும்.

இவ்வமைப்பில் எழுத்தாளன் சுயமாகச் சிந்தித்ததை எழுத இயலாது. எங்கோ உள்ள நுகர்பவனுக்காக கற்பனையான உற்பத்தியில் தான் ஈடுபட இயலும். முதலாளியின் விருப்பந்தான் தொழிலாளியின் விருப்பமாக முடியும். தான் உற்பத்திசெய்த பண்டத்திற்கும் தனக்கும் தொடர்பில்லாத தொழிலாளி போல, கலைஞனுக்கும் அவன் பிரசவித்த எழுத்துக்கும் தொடர்புகிடையாது. ஆகவே தான் எழுத்தாளனது படைப்புகள் இன்றைய சமூக அமைப்பையும் அரசையும் சட்ட விதிகளையும் நியாயப்படுத்துபவையாக அமைகின்றன.

இந்தச் சமூகப் பின்புலத்தை வாசகர்கள் தெளிவாகப் புரிந்துகொண்டார்கள் என்றால், பத்திரிகைகள் வெளியிடும் கதை, கட்டுரை, கவிதை, துணுக்கு இவைகளின் தன்மையை, நோக்கத்தைப் புரிந்துகொள்ள ஏதுவாயிருக்கும்.

சாதி, வரதட்சணை, ஏற்றத்தாழ்வு, வேலையில்லாப் பிரச்சினை இவை அமைப்பைச் சார்ந்த பிரச்சினைகள். இந்த அடிப்படையை விட்டுவிட்டு வெறும் கனவுலகத் தீர்வைச் சொல்லி யதார்த்த நிலையில் சிந்திக்கவிடாது மழுங்கடித்து, திசை திருப்புகின்ற கதைகள் ஏராளம்.

கவிதையா! அதுவும் புதுக் கவிதையா? சமூகவுணர்வுடைய கவிதைகள் என்ற பெயரில், வழிகாட்ட இயலா வெறும் வரிகள்! அரசியல் கிண்டலா? சமூக அமைப்புப்பற்றி சிந்தியாது, தெரிந்தும் தெரியாததுபோல் மறந்து, மறைத்து, வாசகர்களைக் கவரும் வண்ணம் அதனையும் வியாபாரப் பொருளாக்குவது.

பிரச்சாரம்

பத்திரிகைகள் வெளிப்படுத்தும் கலை இலக்கியங்களில் பிரச்சாரம் இருக்கலாமா என சிலர் வினவலாம். மண்ணின் மீது கால் பதித்து, இந்த மண்ணிலேயே நடந்து வாழும் உருவங்களுக்காய் எழுதும்போது கட்டாயம் பிரச்சார வாடை வீசவே செய்யும், சிறகு கட்டிக் ககனத்தில் பறக்கும் கலை இலக்கியங்கள் நமக்கு அதிகப்படியானவை.

சுருக்கமாகக் கூறப்போனல் திறனாய்வு நோக்கில் பத்திரிகைகளைப் படிக்கும்போது ''வெறுமனே தனிமனிதக் கனவு, கற்பனை, விந்தை மனிதனின் அக உளைச்சல்கள், தனி நபரின் எண்ண ஓட்டங்கள், வக்கிரமான அதிர்வுகள்'' இவைகளில் அதிகம் கவனம் செலுத்தாது சமூக நோக்கம் கொண்டவையாய் ''வருங்காலத்தில் நம்பிக்கை வைத்து, தற்கால வாழ்வின் அவலங்களையும் சிறுமைகளையும் சீரழிவுகளையும் சுட்டிக்காட்டுகின்றனவா'' என நோக்கவேண்டும்.
(வல்லிக்கண்ணன்)

இப்பார்வை ஏற்படும்போது பத்திரிகைகளின் உண்மை நிலை புலப்படும். எளிமை, இலக்கியத் தரம், அன்றாடம் மக்களைப் பாதிக்கும் கலாச்சாரப் பிரச்சினைகள் மீது அக்கறை, ஆபாசப் போக்கினைச் சாடல், ஆளும் வர்க்கங்களின் சீரழிவுக் கலாச்சாரப் பரவலை எதிர்த்தல் - என்பன நல்ல பத்திரிகைகளின் நற் பண்புகள்.

— நன்றி - தோழன்.

## மறைமாவட்டக் குருக்களின் வருடாந்த தியானம்

திருகோணமலை - மட்டக்களப்பு மறைமாவட்ட ஆயரும் குருக்களும் தமது வருடாந்த தியானத்தை பதுளை றொக் ஹில்லில் (ROCK HILL) நடாத்தினர்.

கடந்த ஒக்டோபர் திங்கள் 16ம் திகதி முதல் 23ம் திகதிவரை இது நடைபெற்றது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரதம் ஆடும் அருள்தந்தை

# பர்போஸா

விரித்த உள்ளங்கைகளில் சிவப்பு வட்டத்துடன், கால்களை ஒன்றின்மீது ஒன்று வைத்து, யேசுவின் சிலுவை மரணத்தை பரதநாட்டிய அபிநயத்தில் ஆடிக்காட்டுகிற இறைவார்த்தை சபையின் குரு, அருள்திரு. பிரான்சிஸ் பர்போஸா ''நாட்டியத்தின் வல்லமை உணர்ந்தோர் இறைவனின் வல்லமையை உணர்ந்தவராவார்'' என்று உறுதியாகக் கூறுகிறார்.

சிறுவயதிலேயே பர்போஸாவுக்கு நாட்டியத்தின் மீது அபார காதல், பின்னாட்களில் பங்குக் குருவின் முன்மாதிரிகையால் ஈர்க்கப்பட்டு குருமடத்தில் சேர்ந்தார். நடன ஆசையைத் திருச்சபையின் மேலிடம் என்ன கூறுமோ என்ற பயத்திலேயே ஒடுக்கி வைத்திருந்தார். ஆனால் வேத நூலைக் கற்க ஆரம்பித்தவுடன் அவருடைய ஆசைக்கு அதிகாரபூர்வ அத்திவாரம் அமைந்தது.

''வேத நூல் 17 இடங்களில் நடனத்தைச் சிறப்பித்து புகழ்ந்து கூறுகிறது'' என்று கூறும் தந்தை பர்போஸா தாவீதின் சங்கீதத்திலிருந்து நாட்டியத்திற்கு ஆதரவான மேற்கோள்களை பளிச் பளிச் என்று கூறுகிறார்.

தற்சமயம் சிறந்த பரதநாட்டியக் கலைஞராகத் திகழும் தந்தை பர்போஸா இந்நிலையை அடைய எதிர்கொண்ட இன்னல்கள் பல.

தந்தை பர்போஸாவின் நாட்டிய ஆவலுக்கு இறைவார்த்தை சபையின் குருமடத்தில் ஆரம்ப நாட்களில் அவ்வளவு அதிகமான வரவேற்பு இல்லை. மனிதனுடைய ஆன்மீக வளர்ச்சிக்கு கலைவடிவம் - குறிப்பாக நடனம் பெருமளவு உதவும் என்பது தந்தை பர்போஸாவின் கருத்து. இந்தக் கருத்தை தந்தை பர்போஸா தன்னளவில் உறுதியாக நம்பினாலும் அவருக்கு மேலிருந்த குருக்கள் ஒரு குருவானவர் நடனம் ஆட விரும்புவதை ஏற்றுக்கொள்ளவில்லை. இந்திய இறை மக்களுக்கு - அல்லது மக்களுக்கு இந்தியக் கலைகளின் மூலம் கிறிஸ்தவ நெறிகளை உணர்த்தமுடியும் என்ற தந்தை பர்போஸாவின் பிடிவாதம் அவருடைய குருகுல வாழ்க்கையில் பல சிரமங்களை ஏற்படுத்தியது.

இறுதியாக தந்தை பர்போஸாவின் நாட்டிய ஆவலுக்கு சபையின் தலைமை மடம் அனுமதி அளித்தது. தந்தை பரத நாட்டியம் பயின்று தேர்ந்தார்.

ஆயினும் திருச்சபையின் மேலிடமும் கத்தோலிக்கப் பத்திரிகைகளும் போதிய உற்சாகந் தரவில்லை. மாறாகக் கடுமையான விமர்சனங்களை வெளியிட்டன. ஆயினும் தந்தை பர்போஸா நாட்டியத்தின்மூலம் இறைபணி ஆற்றுவதில் ஆர்வம் குன்றாதவராக இருக்கிறார்.

ஆதியாகமம் துவங்கி கிறிஸ்துவின் உயிர்ப்பு வரையிலான நிகழ்ச்சிகளை நாட்டியமாக்கி ஆடிவருகிறார்.

'நிருத்தியாஞ்சலி' என்ற தலைப்பில் அப்போஸ்தல பணியில் இருக்கும் சம்பவங்களை நாட்டிய நிகழ்ச்சிகளாக நெறிப்படுத்தி பிற சமய சகோதரர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறார்.

தமது விருப்பம் பற்றிக் கூறுகையில்: ''திருச்சபையில் நடனத்தையும் ஒரு வழிபாட்டுச் சாதனமாகக் கொண்டுவர வேண்டும். பரத நாட்டியம் என்ற ஒப்பற்ற கலையின் மூலம் இந்திய மண்ணில் கிறிஸ்தவ நெறிகளை ஆழமாகப் பரப்ப முடியும். எனது நிகழ்ச்சிகளுக்கு வரும் பிற சமய சகோதரர்கள் எனது நாட்டியத்தின் மூலம் நான் வெளிப்படுத்தும் செய்தியைப் புரிந்துகொள்கிறார்கள்.''

இவ்வாறு கூறுகிறார் நாட்டியக் கலைஞரான அருள்தந்தை பர்போஸா.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பேராசிரியர் சந்திரசேகரம் -

☐ கிழக்கிலங்கை பெற்றெடுத்த உன்னத கல்விமான்களில் ஒருவராக விளங்கி அகால மரணமடைந்த பேராசிரியர் பத்தக்குட்டி சந்திரசேகரம் அவர்கள் மறைந்து ஓராண்டு கழிந்துவிட்டது. அண்மைய நெருக்கடிகள் தமிழ் மக்களின் உயிர், உடைமைகளை மட்டுமல்ல, உயிர் மூச்சாகத் திகழ்ந்த கல்விமான்களையும் காவு கொண்டது.

பேராசிரியர் சந்திரசேகரம் மண்டூரைப் பிறப்பிடமாகக்கொண்டவர். மண்டூர் இராமகிருஷ்ண பாடசாலை, திருமலை இந்துக் கல்லூரி, மட்டுநகர் சிவானந்தாக் கல்லூரி, யாழ் மத்திய கல்லூரி ஆகியவற்றின் பழைய மாணவர். இலங்கைப் பல்கலைக்கழகம், புதுடில்லி பல்கலைக் கழகம், இலண்டன் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் கல்வி கற்றவர்.

# இலக்கிய அதிர்வுகள்

## -நக்கீரன்-

பேராதனைப் பல்கலைக் கழகத்தில் விரிவுரையாளராகப் பணிபுரிந்தவர். கொழும்பு வளாகக் கல்வித் துறைத் தலைவராகவும் இருந்து பின் இலண்டன் பல்கலைக் கழகம், மதுரை காமராசர் பல்கலைக் கழகம், காந்தி கிராம பல்கலைக் கழகம், கர்நாடகப் பல்கலைக் கழகம், திருவனந்தபுர பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பகுதி நேரப் பேராசிரியராகவும் இருந்தவர். இறக்கும்போது யாழ்ப்பாண பல்கலைக் கழகக் கல்வியியற் புல தலைவராக இருந்தார். மணி விழா மூலம் கௌரவிக்கப்பட்டவர்.

கல்வியியல் தொடர்பாகப்பல ஆய்வுகளை மேற்கொண்டதுடன் பல நூல்களையும் எழுதியுள்ளார். அவர் இறுதியாக வெளியிட்ட நூல் ''கல்வியியற் கோவையாகும்''. தமிழ்மொழியில் பூத நூல், வேதி நூல், தருக்க நூல் ஆகியன வெளிவர வேண்டும். கலைச்சொற்கள் செம்மையுற வேண்டும். தூய தமிழ் நீர் எங்கும் பாய்ந்து ஓடவேண்டும். புத்தம் புதிய நூல்களைப் புனைந்து தமிழன்னையின் திருவடிகளில் காணிக்கையாக வைக்க வேண்டும். நாம் உறக்கம் நீங்கி ஓய்வின்றி உழைத்து நம் மொழிச் செல்வத்தைப் பரப்புதல் வேண்டும்'' என்ற அவரின் இலட்சியத்திற்கு செயலுருவம் கொடுப்பதே நாம் அன்னாருக்கு செய்யக்கூடிய அஞ்சலியாகும்.

## சாகித்திய மண்டலப் பரிசளிப்பு -

☐ அண்மைய நெருக்கடியான காலகட்டத்திலும் ஈழத்தில் பல்வேறு இலக்கிய வெளியீடுகள் வந்த வண்ணமே இருக்கிறது. ஒவ்வொரு வருடமும் குறிப்பிடத்தக்களவில் சிறு கதைத் தொகுதிகள், கவிதை நூல்கள், நாவல்கள், கட்டுரைத் தொகுப்புகள் வந்த வண்ணமே இருக்கிறது. ஆனால் கடந்த சில வருடங்களாகத்தமிழ் எழுத்தாளர்களுக்குச் சாகித்திய மண்டலப் பரிசுகள் எட்டாக் கனிகளாக மாறியதேனோ?

இலங்கைத்தமிழ் எழுத்தாளர்கள் பெறக்கூடிய உயரிய பரிசுகளில் ஒன்றான சாகித்திய மண்டலப் பரிசளிப்பு இனியாவது நடைபெறுமா?

## மல்லிகை ஜீவா -

☐ ஈழத்துத்தமிழிலக்கியத்தைபண்டிதர்களின் சிறைக் கூடத்திலிருந்து விடுதலை பெறச்செய்து பாமர மக்களின் எழுச்சிக் குரலாக மாற்றியவர்களில் குறிப்பிடத்தக்கவர் மணி விழாக் கண்ட எழுத்தாளர் டொமினிக் ஜீவா.

ஜீவா, நடைமுறை அனுபவங்களைத் தரிசித்து அதனூடே கற்றறிந்த நடமாடும் பல்கலைக் கழகம். மணி விழாக் கண்ட அந்த மகோன்னத எழுத்தாளன் பல்வேறு பிரச்சினைகளுக்கு முகம் கொடுத்தும் தளராது கடந்த பல வருடங்களாக வெளியிட்டுவரும் ''மல்லிகை'' சஞ்சிகை அடுத்த வருடம் வெள்ளி விழாக் காணவிருக்கிறது. அன்னாரின் உன்னத சேவைகளுக்காக வாழும் போதே உரிய கௌரவம் கொடுக்கப்பட வேண்டும். யாழ்ப்பாணப் பல்கலைக் கழகம் ஜீவாவுக்கு இலக்கிய கலாநிதிப் பட்டத்தைக் கொடுப்பதன் மூலம் தன்னையும் பெருமைப்படுத்திக் கொள்ளலாம்.☐



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்வு




ஒவ்வொருவரும் தமது பணிகளின் மட்டில் அதி கூடிய கவனம் எடுப்பதனாலும், தத்தமது பணிகளைப்பற்றி மிகைப் படுத்தி வெளிப்படுத்த முற்படுவதனாலுமே பலர் தமது சொந்த வாழ்க்கையில் தோல்வியைத் தழுவிக் கொள்வதுடன், தமது சூழலிலும், சமூகத்திலும், நாட்டிலும், முழு உலகிலுமே பிரச்சினைகளையும் தோற்றுவிக்கின்றனர்.

- ☐ ஓவியன் எப்பொழுதும் ஓவியங்களைப்பற்றிச் சிந்திப்பதாலும்
- ☐ வைத்தியன் எப்பொழுதும் தமது பிரத்தியேக வைத்தியத் துறையை எவ்வாறு வளர்க்கலாம் என ஆர்வம் காட்டுவதாலும்
- ☐ சட்டத்தரணி எப்பொழுதும் தமது வழக்கை எப்படியாவது வெற்றியடைய வழி தேடுவதாலும்,
- ☐ நடிகை எப்பொழுதும் மக்களை, குறிப்பாக இளம் உள்ளங்களை எவ்வாறு கவரலாம் எனச் சிந்திப்பதாலும்,
- ☐ முதலாளி எப்பொழுதும் எவ்வாறு சொத்துடைமைகளைத் திரட்டலாம் என எண்ணுவதாலும்,
- ☐ ஆயுத உற்பத்தியாளன் எவ்வாறு புதிய ஆயுதத் தளபாடங்களை உற்பத்திசெய்யலாம், சந்தைப்படுத்தலாம் எனத் திட்டமிடுவதாலும்,
- ☐ அரசியல்வாதி எப்பொழுதும் தாம், தமது கட்சியே தேர்தல்களில் வெற்றிபெற வேண்டுமென முயற்சிப்பதாலும்,

இவ்வாறு ஒவ்வொரு வகுப்பினரும் மிகையான நேரம் கொடுத்து, சிந்தித்து தம்மையும், தமது அமைப்புக்களையும் முதன்மைப்படுத்த முனைவதாலுமே தமது குடும்பங்களிலும் — சமூகங்களிலும், நாட்டிலும், உலகிலும் பல்வேறுபட்ட பிரச்சினைகளைத் தோற்றுவிக்கின்றனர்.

ஒரு மனிதன், ஒரு குழு, ஒரு நாடு ஏதோ ஒரு விதத்தில் புதியனவற்றைத் தோற்றுவிக்கவே வழிதேடுகின்றான் — தேடுகிறது.

இன்றைய சிந்தனை ஒவ்வொரு சாராரிடையேயும்
— மண்ணாசை — புகழாசை
— பொன்னாசை — பேராசை
ஆகியவற்றையே அடிப்படையாகக் கொண்டு விளங்குகிறது.

இத்தகைய சிந்தனை மூலகங்கள் உலகில் ஆக்கத்தை, நாகரீகத்தை தோற்றுவித்தன எனக் கூறினாலும், அவை நிலையற்றது என்பதை மகா அலெக்சாந்தரின் பேரரசின் வீழ்ச்சி எடுத்துக்காட்டுகிறது. குதிரைப் படைகள் கட்டியெழுப்பிய மாபெரும் பேரரசு அவர் இறந்ததும் குறுகிய காலத்தினுள் அழிந்தது.

அறிவு சார்ந்த போட்டிகளினின்று நாம் விடுபட்டு (மனித) உணர்வு அடிப்படையில் தொடர்பு கொள்ள அன்புக்குரல் கொடுப்பது.

- கலையுலகன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அன்பு ஓர் அடிப்படைத் தேவை

யுத்த மேகமும் உயிர்ப் பீதியும் எங்கும் சூழ்ந்து மனித இரத்தம் சிந்தப்பட்டுக்கொண்டிருக்கும் ஒரு நெருக்கடிக் காலத்தில் வாழ்ந்து கொண்டிருக்கிறோம். இந்நிலையில் இன்றைய சிசுக்களான நம் எதிர்கால சந்ததியினருக்கு நாம் எதனை நமது சொத்தாக விட்டுச் செல்லப் போகிறோம் என்ற ஐயப்பாடு எம் இதயங்களில் எழுவது தவிர்க்கமுடியாது. ஏனெனில் புறவுலகிலும், உடலளவிலும் உளரீதியாகவும் நமது மக்கள் மிகவும் நொந்து போயுள்ளனர். சமகால அரசியற் பிரச்சினைகளுக்காக அன்று தோன்றிய நம்பிக்கை நட்சத்திரங்கள் காலப்போக்கில் வெறும் எரிவெள்ளிகளாய் எரிந்து கரிக்கட்டைகளாக மக்களின் தலைமீதே விழுந்து அழுத்தத் தொடங்கிவிட்டன. எத்தனை காலம் இவ்வவல வாழ்வு இத்தீவை இன்னும் ஆட்டிப் படைக்கப் போகிறதோ என்ற சிந்தனையே எல்லோர் மனதையும் ஆக்கிரமித்துக் கொண்டுள்ளது. தொடரும் பிரச்சினைகளைச் சகித்துக் கொண்டேனும் நிரந்தர முற்றுப் புள்ளியொன்றை இட்டுக்கொள்ள மட்டுமே மக்கள் விரும்புகிறார்கள் என்பது தெளிவு.

இன்றைய சூழ்நிலையில் பரஸ்பர நம்பிக்கையீனங்களும், விரோத மனப்பான்மையும் குரோதமும் வெவ்வேறு இனங்களுக்கிடையே மட்டுமன்றி சமஇன மக்களிடையேயும் வளர்ந்து வந்துள்ளமையையும் காண்கின்றோம். இன, மொழி, மத பேதங்களுக்கப்பாற்பட்டு மானுடம் என்கிற உயர்ந்த நெறியை மறந்து குரோதங்களை வளர்ப்போரை இனங்கண்டு ஒதுக்கும் நிலை ஒருபுறமிருக்க, சுய இனக்குரோதங்களை வளர்ப்போரை மக்கள் இனங்காண வேண்டிய நிலைமை இன்று தோன்றியுள்ளது.

இந்நிலையில் வளரும் நம் சமுதாய இளஞ்சிறார்களுக்கு நாம் விட்டுச் செல்லப்போகும் சொத்துக்கள் பழியுணர்ச்சி, பகையுணர்ச்சி, வெறுப்பு, குரோதம் என்ற அநாகரிகங்களை மட்டும் தான். இவற்றால் பீடிக்கப்பட்டு இளமையிலேயே எம் சந்ததி மனநோயாளியாக ஆகிவிடக்கூடாது. இன்றே நம் சிறுவரின் மனப்போக்குகளை சற்றே அவதானிப்போமாயின் இந்த நிலைமை தெளிவாகிறது. அவர்கள் விளையாடும் விளையாட்டுக்களும், கேட்கும் விளையாட்டுப் பொருட்களும் வித்தியாசமானவை. விளையாட்டுத் துப்பாக்கியைத் தூக்கி வாயினாலே சத்தமிட்டு ஒருவரையொருவர் சுட்டு விளையாடுகிற அளவுக்கு அவர்களின் மனநிலை பாதிக்கப்பட்டுவிட்டது. இது விரும்பத்தக்கதோர் காத்திரமான நிலைமையல்ல. ஆனால் குழந்தைகளின் அடிமனதில் இத்தகைய உணர்வுகளை பதியவைத்தவை எவை? அவர்கள் பெற்றுள்ள அனுபவங்கள் என்பதே உண்மை! குழந்தைகள் இவ்வாறான அனுபவங்களைப் பெறக் காரணம் நாமேயன்றி வேறு யார்? 'மனிதர்கள்' என்ற உணர்வை மறந்து இனரீதியாகவும் மொழிரீதியாகவும் மதரீதியாகவும் குறுகிய மனப்பான்மையுடையவர்களாகப் பலர் வாழநினைத்தமையே இன்றைய அவல நிலையின் உயிர் நிலை.

தன்னைப்போல் பிறனையெண்ணும் தன்மை மாறி, தாங்களே உலகில் உயர்ந்தவர்கள் ஏனையோர் தமக்கு அடிமை செய்யவேண்டியவர்களே என்று ஒருசாரார் நினைத்தது எவ்வளவு பெரிய தவறென்பதைசம்பந்தப்பட்டவர்களும் தற்போது உணர்ந்து வருகிறார்கள் ஆனால் கண்கெட்ட பின்வரும் சூரிய நமஸ்காரங்களே அவை.

உலகில் தோன்றிய எல்லா மதங்களும், எல்லா மதபோதகர்களும், எல்லாப் பெரியார்களும், எல்லா இலக்கியங்களும் சொன்ன

## மருத்துவக் குறிப்பு

நோய்கள் உங்களைக் கண்டு நடுங்க வேண்டுமா? இதோ வைத்தியம் இருக்கிறது. 5 நெல்லிக்காயை எடுத்து சாறு பிழிக. அதே அளவு எலுமிச்சம் பழச் சாறு கலந்து, 2 ஸ்பூன் தேன்விட்டு அரைக்குவளை சுடுநீர் கலந்து காலையில் பருகுங்கள். மல்டி விட்டமின் மாத்திரைகளைவிட சக்திவாய்ந்தது இது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தெல்லாம் என்னவோ ஒன்றே ஒன்றைத் தான். அறம் வெல்லும் மறம் வீழும், அன்பே வாழும் என்பதைத்தான்.

சிலுவையில் உயிர்த்த இயேசுவானுலென்ன
சிந்தனையாளர் முகம்மதுவானுலென்ன
போதிமரத்து மாதவனுனுலென்ன
இந்தியத் தந்தை காந்தியானுலென்ன

எல்லோரும் சொல்லியது அன்பின் மகத்துவத்தையே.

''அன்பிலார் எல்லாம் தமக்குரியர்
அன்புடையார்
என்பும் உடையர் பிறர்க்கு''
(குறள்: 72)

என்ற வள்ளுவன் வாக்கின் உட்கிடையுமஃதே!

அன்பு - கருணை - பாசம் இல்லாத எல்லோரும் ''உலகிலுள்ள உயர்ந்த செல்வங்கள், சுகங்கள் எல்லாம் தமக்கு மட்டுமே கிடைக்கவேண்டும்'' என்று எண்ணுவார்கள் அன்புகொண்டஉயர்ந்தவரேவெனில்அவர் தம் உடற்கூட்டின் எலும்பையும் பிறர்க்கு உரிய தாக்கத் தயங்கமாட்டார்கள் என்பதே இதன் தெளிவு... என்பு வேண்டாம்! சற்று அன்பு காட்டியிருந்தால் ஏன் இந்த அவலநிலை?

எம்மைக் கொல்லவரும் பகைவனுக்கு அன்பு காட்டினுல் என்ன நடக்கும்? எமக்கு அன்பு செய்பவர்க்கு மட்டுமே நாம் அன்பு செய்ய வேண்டும் என்றெண்ணுவது அறிவற்றோர் செயல் என்கிறுர் பொய்யா மொழிப் புலவர். ''பகைவனுக்கருள் வாய் நெஞ்சே'' என்ற வாக்கிற்கமையவும்

''இன்னுசெய்தாரை ஒறுத்தல் அவர்நாண
நன்னயம் செய்துவிடல் என்ற''... சிறந்த நெறிவழியே சென்று எமது கொடிய பகைவனே வென்றுலும் அவனுக்கு அன்பு காட்டுவதன் மூலம் அவனை அவனது பகைமைக் குணத்தை குரோதத்தை நீக்கி அவனை நண்பனுக்கிக்கொள்ள முடியும். அறத்திற்கும் மறத்திற்கும் அன்பே துணையெனத் தெறித்த குறள் இதோ.

''அறத்திற்கே அன்புசார் பென்ப அறியார்
மறத்திற்கும் அஃதே துணை'' குறள் 76

விகாரமாகிப்போன உலகத்தின் அநா

---

ஸாமுவேல் ஜான்சன் ஆங்கில அகராதியை உருவாக்கியவர் என்பது தெரியும். இவர் தனது 26வது வயதில் திருமணம் செய்துகொண்டார். அந்தப் பெண்ணேடு இறுதிக் காலம்வரை சண்டை சச்சரவு இல்லாமல் வாழ்ந்தார். இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? போர்ட்டர் என்ற பெயருடைய அவருடைய மனைவி ஒரு விதவை. அதைவிட அவரின் வயது திருமணம் நடக்கும்போது 46. ஜான்சனைவிட 20 வயது மூத்தவர். மகிழ்ச்சிகரமான இல்லற வாழ்விற்கு வயது ஒரு தடை அல்ல.

---

கரிகத்தனங்களை அறவே ஒழித்து தோழமை, ஒற்றுமை, சமாதானம் என்கிற அந்தஸ்துடைய மானிட உறவுகளை உரிமைகளை பெற்றுத்தரக்கூடிய ஒரே ஆயுதம் அன்பே! ஆனுல் அன்பை யார்மீது கொள்வது. ஆட்டின் மீதா ஓநாயின் மீதா என்ற கேள்வி எழுவது இயற்கை! ஆனுல் ஆடோ ஓநாயோ உயிர்கள் என்ற வகையில் அன்பு கொள்வதே கடமை. அன்பிற்கு ஓநாயும் அடங்கிப்போகலாம்

''என்பிலதனை வெயில்போலக் காயுமே
அன்பிலதனை யறம்''

வெயிலின் வெக்கை தாங்காது மணலிலே கிடந்துபுழு துடிதுடித்து இறப்பதைப்போல அன்பில்லாதவர்களை இயற்கை இறைவன் காலக்கிரமத்தில் வருத்தியே தீரும் என்கிறது வான்மறை. இன்று நாம் கண்கூடாகக் காண்பதெல்லால் இதையன்றி வேறென்ன? இதைத் தானு எதிர்கால சந்ததி பெற்றுக்கொள்ளப் போகிறது.

□

எம். கணேசமூர்த்தி
மாகோ.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# மாணவர் பக்கம்

## அப்போஸ்தலர் பணி - IV
### (க. பொ. த. உயர்தரம்)

**புதிய பணிக்குப் புதிய மனிதர்** அப்போஸ்தலர் பணியின் முக்கிய கதாபாத்திரமாக விளங்குபவர் புனித சின்னப்பர். தார்சு நகரத்தைச் சேர்ந்த சவுலுக்கு பவுல் (சின்னப்பர்) என்ற உரோமைப் பெயரும் இருந்தது. சவுல் மிகு கட்டுப்பாடுடைய யூத குடும்பத்தில் பிறந்தவர். தார்சு ஒரு பெரிய துறைமுக நகரமாகவும், பிரபல்யம் வாய்ந்த வியாபாரத் தலமாகவும் விளங்கியது. ஏனைய யூதர்களைப் போன்று சவுலின் தந்தையும் தன் மகனுக்கு வாணிகத் துறையிலும் பயிற்சியளித்திருந்தார். இவ்விதம் சவுல் கூடாரம், பாய்மரம் அமைப்பதில் தேர்ச்சி பெற்றிருந்தார். தார்சு நகர் கல்விக்கும் பேர்போன இடமாக விளங்கியதால் சவுல், கமாலியேல் என்ற பேரறிஞரிடம் கல்வி பயின்ருர். அவரது தந்தை பெரிய பணக்காரராக இருந்திருக்க வேண்டும். அதனுல்தான் விலையுயர்ந்த கல்விக் கூடத்துக்கு மகனை அனுப்பி கல்விகற்க வழிவகுத்திருக்கின்ருர். அத்துடன் உரோமை குடியுரிமையைப் பணம் கொடுத்துப் பெற்றிருந்தார். சவுலின் தங்கை தலைமைச் சங்க உறுப்பினர் ஒருவரைத் திருமணம் செய்திருந்தார்.

சவுல் அக்காலத்தில் சிறந்த அறிஞராகத் திகழ்ந்தார். அவரை அறிந்தவர்கள் பேரறிஞர் கமாலியேலுக்கு அடுத்த வாரிசு அவர்தான் என எதிர்பார்த்தனர். சவுல் யூத சட்டங்களைத் தவருது பின்பற்றும் பரிசேயனுக விளங்கினுர். இளைஞனுக இருந்தாலும் உலகம் முழுவதையும் தன் காலடியில் வைத்திருந்தார் என்ருல் மிகையாகாது. சுருங்கக் கூறின் அவரது இளமை, செல்வம், திறமை, அறிவு அனைத்தும் எல்லோருடைய நன்மதிப்பையும் பெற்றுக்கொடுத்தது.

**குறைவிலும் நிறைவு** எவ்வளவுதான் சவுல் கொடிகட்டிப் பறந்தாலும் அவரை வாட்டிய குறை ஒன்று இருந்தது. சிலர் அதனை ஒருவித வலிப்பு வியாதி என்று கூறுகின்றனர். மருத்துவம் வளர்ச்சியடைந்த இன்றைய உலகில் அதனை இலகுவாகக் குணமாக்க முடியும். எவரும் அத்தகைய நோயை இன்று பெரிது படுத்துவதில்லை. ஆனுல் அக்காலத்தில் அப்படியல்ல. வலிப்பு வந்து வாயில் நுரைகக்கத் துன்பப்படுவது துர்ப்பாக்கியமாக, இகழ்ச்சிக்குரியதாக, தீய ஆவியின் செயலாகக் கருதப்பட்டது. அந்த நோய் அவரின் பார்வையையும் பழுதடையச் செய்தது. இன்று குருடர்களை நாம் மனிதராக மதிக்கின்ருேம். ஆனுல் அன்று குருடன் பாதையில் தடுமாறிச் செல்வதைப் பார்த்தால் எள்ளி நகையாடுவர். சின்னப்பர் இந்த நோயைப் பற்றித் தன்னுடைய திருமடலில் குறிப்பிடுகையில் ''இறைவன் அனுப்பிய நோய் ஒன்று என் உடலில் தைத்த முள்போல் வருத்தியது'' (2 கொரிந். 12/7) என்று கூறுகின்ருர். இந்த நோயிலிருந்து தன்னை விடுவிக்குமாறு மூன்று தடவை இறைவனை வேண்டியிருக்கின்ருர். இறைவன் அளித்த பதில் ''நான் தரும் அருள் உனக்குப்போதும்'' இது சின்னப்பருக்கு குறைவிலும் நிறைவுடன் வாழக் கற்றுக்கொடுத்தது.

**தீவிரவாத இளைஞர்** சின்னப்பர் இயேசுவை நேருக்கு நேர் சந்தித்திருப்பார் என்று சொல்லமுடியாது. ஆயினும் அவரது பாடுகள், சிலுவை மரணம் போன்றவை பற்றிக் கேள்விப்பட்டிருப்பார். உண்மையான பரிசேயனுக விளங்கியதால் இயேசுவுக்கு அளிக்கப்பட்ட மரண தண்டனை நியாயமானது என நம்பியவர். புதிய நெறியைப் போதித்தவர்களை வெறுக்கத் தொடங்கினுர். இயேசுவை மெசியாவாக ஆக்கியவர்கள், தேவதூஷணம் சொல்கின்றவர்கள் எனவும், அவர்கள் மரண தண்டனைக்குரியவர்கள் என்றும் கருதினுர். அத்தகையவர்களைத் தண்டிப்பதே கடவுளின் திருவுளம் என உறுதிபூண்டு தலைமைச் சங்கத்தினரிடம் சென்று புதிய நெறியைச் சேர்ந்தவர்களைக் கைது செய்து ஜெருசலேமுக்கு விசாரணைக்கு இழுத்து வர அனுமதி கோரினுர். அவருக்கு அனுமதி வழங்கப்பட்டது. அத்துடன் சில



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வீரர்களும் அவரது தலைமையில் அவருக்குத வியாக அனுப்பப்பட்டனர். முடியப்பர் கொலை செய்யப்பட்ட பொழுதும்கூட சின்னப்பர் அங்கு நின்று அனைத்தையும் பார்த்துக்கொண்டிருந்ததாகக் கூறப்பட்டுள்ளது. முடியப்பருக்கு நிகழ்ந்ததைக் கண்டு மகிழ்ந்தாராயினும் முடியப்பர் இறந்த விதம், இறக்கும்போது அவர் மன்றாடியது அனைத்தும் அவரது உள்ளத்திலே அவரையறியாமலேயே ஆழமாகப் பதிந்துவிட்டது. அன்று தொட்டு மன நிம்மதியற்றவராக அலைந்தார்.

**தமஸ்கு அனுபவம்** பலவித சிந்தனைகளிகளினுல் அலைக்களிக்கப்பட்டு மன நிம்மதியற்றுத் திரிந்த சின்னப்பர் தனது உணர்ச்சிகளை அடக்க புதிய நெறியை அழிக்கும் முயற்சியில் தீவிரமாக ஈடுபட்டார். தமஸ்கு நகருக்குப் பயணமானுர். போகும் வழியில் நடந்தது என்ன? தரையில் விழுந்தார் எனக் கூறப்பட்டுள்ளது. நிம்மதியற்றிருந்ததால் வழமையான வலிப்பு நோய் தாக்கி தரையில் வீழ்ந்தாரா? வெயில் வெப்பத்தாக்குதலுக்குட்பட்டு வீழ்ந்தாரா? ஏனெனில் நடுப்பகல் நேரத்தில் பாலஸ்தீனு தேசத்தில் எவருமே வெளியில் செல்வதில்லை. இவையெல்லாம் ஒன்று சேர்ந்துதான் அவரை வீழ்த்தியிருக்க வேண்டும். எவ்வாருயினும் அவர் தரையில் வீழ்ந்த வேளையில் இறைவனின் செய்தி அவர் உள்ளத்தை ஊடுருவியிருக்க வேண்டும். இந்த அனுபவம் அவரில் முழுமையான மாற்றத்தை விளைவித்ததெனில், அவரது வாழ்வின் மாற்றத்தை வைத்துத்தான் இந்த அனுபவத்தின் நீளம், அகலம், உயரம், ஆழத்தை அளவிடமுடியும். தமஸ்கு நகருக்குக் கொண்டுசெல்லப்பட்டார். மூன்று தினங்கள் பார்வையற்றிருந்தார். அனனியா அவரை ''கிறிஸ்துவின் சகோதரர்'' என அழைத்தது உண்மையிலேயே வியப்பாயிருக்கவேண்டும். முதன் முதலில் அவருக்கு நீங்கியது உள்ளத்தின் இருளாகும். அனனியா அவர்மேல் கைகளை வைத்ததும் பார்வை பெற்ருர்.

**புதிய மனிதர்** தமஸ்கு அனுபவம் எப்படிப் பட்டதாயிருந்தாலும், அது புனித சின்னப்பரின் வாழ்வில் ஏற்படுத்திய முழுமையான மாற்றத்தை அறிவது நல்லது. உண்மையிலேயே அவர் ஒரு புதிய மனிதனுக மாறியிருந்தார். தமஸ்கு அனுபவத்துக்கு முன்னர் இயேசுவை மெசியா என்று அழைப்பதைக் கேட்க ஆத்திரமடைந்தவர் இப்பொழுது இயேசுவே மெசியா என்பதை விசுவசித்தார். பின்னர் இயேசு கடவுளின் மகன் எனப் போதிக்கத் தொடங்கினுர். தமஸ்கு அனுபவத்துக்கு முன்னர் புதிய நெறியைப் பின்பற்றியவர்களைத் துன்புறுத்துவதே நோக்கமாகக் கொண்டிருந்தார். இப்பொழுது புதிய நெறியைச் சேர்ந்தவர்களோடு ஒருவராக இணைந்துகொண்டார். இந்த அனுபவத்துக்கு முன்னர் யூதர்கள் போற்றிய கண்காணுத் தலைவனுகத் துலங்கினுர். ஆனுல் இப்பொழுது அவர்களால் வெறுக்கப்பட்ட ஒருவராக ஆகிவிட்டார். அழைப்பைப் பெறுவதற்கு முன்னர் பணமும் புகழுமே வாழ்வின் இலட்சியமாகக் கொண்டு விளங்கியவர் இப்பொழுது தனது பணி புறக்கணிக்கப்பட்ட துன்புறுத்தப்பட்ட ஒரு சமூகத்தின் நடமாடும் ஏழைப் போதகனுக இருப்பதுதான் என்பதை உணர்ந்தார். தமஸ்கு அனுபவத்தின் பின்னர் சின்னப்பரின் இறையியல் நோக்கும் மாறியது. இயேசு உயிரோடு இருக்கின்ருர். இயேசுவிடம் விளங்கிய தெய்வீகத் தன்மை சின்னப்பரை ஆட்கொண்டு விட்டது. எனவே தான் புனித சின்னப்பரின் போதனை மாறியது. மீட்பு என்பது சட்டத்தைக் கடைப்பிடிப்பதனுல் அல்ல மாருக இயேசுவின் மேல் வைத்த விசுவாசத்தினுல்தான் கிடைக்கும் என்றும், அதனுல் மீட்பு யூதருக்கு மட்டும் உரியதொன்றல்ல மாருக அனைவருக்கும் கிடைக்கக்கூடியது என்பதே அவரது போதனையின் சாரம்சமாக மாறியது.

---

## மருத்துவக் குறிப்பு

இரத்த அழுத்தத்திற்கு ஆங்கில மருந்துகளை வாங்கிச் சாப்பிடுகிருர்கள். இதனுல் செலவு அதிகமாகிறது. மருந்துச் செலவுகளைக் குறைக்க விரும்புபவர்களுக்கு ஒரு யோசனை. துளசி இலைச்சாறு ஓர் அவுன்ஸ் தினசரி சாப்பிட்டு வந்தால் இரத்த அழுத்தம் குறைகிறது. இரத்தக் குழாய்களில் அடைப்பும் நீங்குகிறது. துளசிச் செடியை வீட்டில் வளர்க்கலாம். மருந்துச் செலவும் குறையும்.

---



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**இரு உலகின் மனிதர்**

ஏன் சின்னப்பர் இறைவனால் தேர்ந்தெடுக்கப்பட்டார் என்ற வினா நம் உள்ளத்தில் எழுவது நியாயமே. விசேடமாகப் பயிற்றப்பட்ட, திறமைகள் நிரம்பப்பெற்ற யூத மறையில் ஊன்றப்பெற்ற ஒருவர் கடவுளால் தேர்ந்தெடுக்கப்படுகின்றார் என்றால் அது ஒரு விசேட பணிக்காகத்தான் என்று உறுதியாகக் கூறமுடியும். வேறு எவரும் சின்னப்பரைப் போன்று அவருக்குக் கிடைத்த பணியைச் செய்திருக்க முடியாது. யூத சமயத்தில் ஊற்றெடுத்த கிறிஸ்தவ போதனையை, விசுவாசத்தை கிரேக்க புறவின உலகுக்கு எடுத்துச் செல்வதே அவரது பணியாக இருந்தது. சின்னப்பர் யூத மறையில் எவ்வளவுக்கு வேரூன்றியிருந்தாரோ அவ்வளவுக்கு புறவின உலகிலும் பயிற்றப்பட்டிருந்தார். அவர் பிறப்பால் யூதனாக இருந்தாலும் வாழ்ந்தது புறவின மக்கள் மத்தியில் தான். எனவே தான் இரு உலகின் மனிதராக விளங்கிய சின்னப்பரை இறைவன் தன் பணிக்கெனத் தேர்ந்துகொண்டார்.

## வினாக்கள்

1. சின்னப்பரின் தமஸ்கு பயணத்தின் நோக்கம் என்ன?
2. சின்னப்பரின் தமஸ்கு அனுபவத்தை விபரிக்குக?
3. தமஸ்கு அனுபவம் சின்னப்பரில் ஏற்படுத்திய மாற்றம் என்ன?
4. கீழ்க்காணும் வசனம் தொடர்பான சம்பவத்தை விபரிக்குக.
   ''புறவினத்தாருக்கும், அரசர்க்கும், இஸ்ராயேல் மக்களுக்கும் எனது பெயரை அறிவிக்க என்னால் தெரிந்துகொள்ளப்பட்ட கருவி அவர்''
5. உமது கருத்தின்படி இறைவன் சின்னப்பரை ஏன் தனது நற்செய்திப் பணிக்காகத் தேர்ந்தெடுத்தார்?
6. 'சின்னப்பரின் இளமைக் காலம்' என்னும் தலைப்பில் சிறு கட்டுரை வரைக.

---

# மறையாசிரியர் பயிற்சிக் கருத்தரங்கு

திருமலை - மட்டுநகர் மறை மாவட்டத்தின் விவிலிய, திருவழிபாட்டு, மறைக்கல்வி முப்பணி நடுநிலையம், மட்டக்களப்பு மாவட்டத்தைச் சேர்ந்த க. பொ. த. உயர்தரம், படித்த இளம் பெண்களுக்கு இருவாரம் 1-8-88 முதல் 14-8-88 வரை மறைக்கல்விப் பயிற்சிப் பாசறை ஒன்றை ''அருள் ஒளி'' இல்லத்தில் நடாத்தியது. இப்பயிற்சியில் 45 பேர் பங்குகொண்டனர். விவிலியம், உளவியல், புதிய முறையில் மறைக்கல்வி கற்பித்தல், மறைக்கல்வியில் குழந்தைகளை அணுகும் முறை, மறையாசிரியருக்குரிய பண்புகள், திருச்சபை வரலாறு, இலங்கைத் திருச்சபை, அருட்சாதனங்கள், பாடல் பயிற்சிகள், ஆன்மீக வாழ்வு, கலை வடிவில் மறைக்கல்வி ஆகிய தலைப்புக்களில், அருட்தந்தையர் பலரும், அருட்செல்வர்களும், அருட்செல்விகளும், தமிழ்நாடு திண்டிவனப் பயிற்சிபெற்ற மறையாசிரியர்களும் கருத்துரைகள் வழங்கினர். ஒப்படைகள் தயாரிக்கும் முறைகளும் பயிற்சி பெற்றவர்களுக்குக் கற்றுக் கொடுக்கப்பட்டன. பயிற்சியின் இறுதி நாளான 13ம் நாள் (13-8-88) பயிற்சியை முடித்துக்கொண்ட மறையாசிரியர்களின் கலை நிகழ்ச்சிகளும் ஆயர் இல்ல சாள்ஸ் மண்டபத்தில் நடைபெற்றது. நிகழ்ச்சியின் இறுதியில், பயிற்சி பெற்றுச் செல்பவர்களுக்கு நடுநிலையத்தினால் சான்றிதழ்களும் வழங்கப்பட்டன. பயிற்சியை முடித்தவர்களுக்கும், கருத்துரைகள் வழங்கிய அனைவருக்கும் நடுநிலைய இயக்குனர், மறையாசிரியர்கள் நன்றிகள் கூறி முடித்தனர்.

தகவல்:

**ஏ. ஜி. ஞானப்பிரகாசம்**
மறைக்கல்வி நடுநிலையம்,
ஆயர் இல்லம் - மட்டக்களப்பு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலக்கியம் பற்றிய இரு கோட்பாடுகள்

✶ க. யோகநாதன், B. A. (Hons.)

இலக்கியத்தை எதற்காகப் படைக்க வேண்டும் எனக் கேட்டால் இக் கேள்விக்கு இலக்கியவாதிகள் இடையே இரண்டு வித மான விடைகள் இருக்கக் காணலாம்.

I கலை உணர்வே இலக்கியப் படைப்பின் இறுதிப் பயன் என்பார்கள் ஒரு சாரர். இவர்களின் கருத்துப்படி கலை கலைக்காகவே என்பது முடிவு.

II சமுதாய நோக்கே இலக்கியப் படைப் பின் இறுதிப் பயன் என்பார்கள் பிறிதொரு சாரர். இவர்களின் கருத்துப்படி கலை சமு தாயத்திற்கானது என்பதே முடிவு.

இவ்விரு தரப்பாரின் கருத்துக்களையும் தொகுத்து நோக்குவதே இச் சிறு கட்டுரை யின் நோக்கம் ஆகும்.

**கலை கலைக்காகவே :** இலக்கியம் இலக்கியப் பயன் கருதியே படைக் கப்படல் வேண்டும். பிறபயன்கருத்து இலக்கிய இரசனைக்கு அவசி யம் அற்றது என்பார்கள் இக் கோட்பாட் டாளர்கள். உலகின் பல்வேறு மொழி இலக் கியவாதிகள் இடையேயும் இவ்விரு கோட் பாட்டாளர்களை நாம் இன்று வரை காண முடியும்.

இலக்கியம் என்பது ஒரு கலையே. ஓவி யத்தைக் கண்டு மகிழ்கின்றோம். சிற்பத்தைக் கண்டு மகிழ்கின்றோம். அதுபோல் இலக்கியத் தையும் துய்ப்பதின் மூலம் மகிழ்கின்றோம். ஆக கலை என்பது இன்பம் என்ற ஒரே பய னைத் தருவதுதான். இவ்வாறு இக் கோட் பாட்டாளர்கள் கூறுவர். மாமல்லபுரச் சிற் பத்தையும், தாஜ்மகால் கட்டிடத்தையும், சிகிரியா ஓவியத்தையும் நாம் காண்பதின் மூலம் காணும் அக்கணநேர இன்பத்தையே நாம் பயனாகக் கொள்கின்றோம். வேறு எப் பயனையும் இவற்றில் நாம் எதிர்பார்ப்பது



இல்லை. அது போலவே ஒரு கவிதையை அல்லது சிறு கதையை அல்லது நாவலைப் படிக்கும்பொழுது அதுதரும் அந்நேர இன்பத் திற்காகவே அவற்றை நாம் கற்க வேண்டும் என்பது இக்கோட்பாட்டாளர்கள் வற்புறுத் தும் ஒரு கருத்தாகும்.

மேலும் கலையை அநுபவிப்பதில் அது தரும் அநுபவ இன்பத்தை மட்டுமே நாம் கருத்திற்கொள்ள வேண்டும். இதை விடுத்து வேறு ஏதும் பயனை நாம் கலைகள் மூலம் எதிர்பார்ப்போமாகில் அதனை நாம் கலை அநுபவம் என்று கூற இயலாது என்றும் இக் கட்சிக்காரர் வாதாடுவார்கள்.

இக்கட்சிக்காரர்கள் இலக்கியப் படைப்புச் செயலுக்கும், இரசிப்புச் செயலுக்கும் பின் வருமாறான விளக்கத்தையே அளிக்க முனைவர்.

ஒரு கவிஞனை சில வாழ்க்கை நிகழ்ச்சி கள் ஈர்க்கின்றன. அவை அவனது மனதின் ஆழச் சென்று பதிகின்றன. இப் பதிவுகள் கவிஞனின் மனதில் கற்பனைக் கோலங்களைத் தோற்றுவிக்கின்றன, இந்தக் கற்பனை அனுப வத்தில் ஈடுபடுவதால் கவிஞன் சோகம் அல் லது மகிழ்ச்சியை அடைகின்றான். இந்தச் சோகம் அல்லது மகிழ்ச்சி என்ற உணர்வு அளவு மீறிச் செல்லும்பொழுதே கவிஞனில் இருந்து அவ்வுணர்வு கலையுணர்வாகி கவிதை வடிவம் பெற்று வெளிப்படுகின்றது. இந்த நிலையில் (படைப்புச் செயற்பாட்டின்போது) குறிப்பிட்ட கவிதையை ஆக்கும் அக் கவிஞன் உணர்ச்சி வயப்பட்டவனாக இருக்கின்றானே ஒழிய பிற பயன் எதையும் கருதி அவனிடம்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## மருத்துவக்குறிப்பு*

உடற் பலம் வேண்டுமா? வெந்தயக் கீரை, அல்லது முருங்கைக் கீரையை வேகவைத்துத்தாளித்துக் கொள்ளுங்கள். இறக்கும் சமயத்தில் ஒன்று அல்லது இரண்டு முட்டைகளை ஊற்றிக் கிளறி வெந்தவுடன் இறக்கிச் சூடாகச் சாப்பிடுங்கள்.

இருந்து கவிதை பிறக்கவில்லை. எனவே அக் கவிதையை இரசிக்கும் வாசகனும் கவிஞனின் கலை உணர்வுலகை அறிந்து அதனுள் பிரவேசித்து கவிஞன் அனுபவித்த உணர்வைத் தானும் பகிர்ந்துகொள்ள வேண்டுமே ஒழிய வேறுபயன் எதையும் அக் கவிதையில் இருந்து எதிர்பார்க்கக்கூடாது. அவ்வாறு எதிர் பார்த்தால் அக் கவிதையை ஆக்குவதில் கவிஞன் பெற்ற கலை அனுபவத்தை கண்டு கொள்வதில் இருந்து வாசகன் தவறிவிடுவான். என இக் கட்சிக்காரர்கள் தமது கொள்கையை விளக்குவர்.

இக் கட்சியைச் சார்ந்த ஐரோப்பியத்திறனாய்வாளர் A. C. பிராட்லி என்பார் பின் வருமாறு தமது கட்சிக் கருத்தை எடுத்துரைப்பார்.

''ஒரு கவிதை அதனைப் படிக்கும் பொழுது இருக்கக்கூடிய இன்பத்தைத் தவிர வேறு ஏதும் பொருளையும் தன்னகத்தே கொண்டு இருக்கலாம். ஆனால் கவிதை இரசனையில் அவை இரண்டாம் தரம் ஆனவை. அவற்றை நாம் கவனிக்கத் தொடங்கினால் தலையாய பயனை இழந்து விடுவோம்'' என்பார் பிராட்லி.

கலை கலைக்காகவே என்ற கட்சிக்காரர்கள் தமது வாதத்தின் உச்சமாக திறனாய்வையும் கூட நிராகரிக்கும் நிலையை அடைகிறார்கள். ஒரு கவிதையின் சிறப்பு அல்லது சிறப்பின்மை என்பது அதனை வாசிக்கும் பொழுது உணர மட்டுமே முடியும். ஒரு நல்ல கவிதை மெய் சிலிர்ப்பைத் தரும். ஆகவே அதனை அநுபவித்து உணரலாமே தவிர அந்த அநுபவத்தை பிறருக்குச் சொற்களைக் கொண்டு உணர்த்த இயலாது என்பது திறனாய்வு தொடர்பான இவர்கள் கருத்தாகும்.

இக் கருத்தின்படி கலை என்பது அநுபவத்திற்கு உரிய ஒன்று மட்டுமே அன்றி விமர்சனத்திற்கு உரிய ஒன்று அல்ல என்ற நிலை ஏற்படுகின்றது.

கலைஞன் எது பற்றிப் பேசினாலும் கவலை இல்லை. அவனின் சிருஷ்டி எவ்வாறு உருவாக்கப்பட்டது என்பதுதான் முக்கியம். கலை இன்பத்தை சென்றடைவதற்கு உரிய வழி காட்டி இல்லை. கலையே இன்பம். அதாவது கலையின் இலக்கு கலைக்கு வெளியே எதுவும் இல்லை. கலையே கலையின் இலக்கு. இதுவே இக் கட்சிக்காரர்களின் கருத்துச் சாராம்சம் எனலாம். இக்கருத்தை ஊன்றிக் கவனிக்கும் பொழுது இக் கட்சிக்காரர்கள் இலக்கியத்தின் உருவத்திற்கே முதன்மை அளிக்கும் உருவ வாதிகளாக நிற்பதையும் காணமுடிகின்றது.

### இக்கோட்பாட்டின் குறைபாடுகள் :-

(1) கலை, இன்பம் தருவது என்றால் அதில் இன்பம் தரும் பகுதி எது? கவிதையின் பொருள் முக்கியமற்றது, அதன் அநுபவமே (கலையின்பம்) முதன்மையானது எனக் கலைவாதிகள் கூறும் பொழுது கவிதை தரும் இன்பம் கவிதையில் எதில் அடங்கி இருக்கின்றது என்ற கேள்வி எழுவது இயல்பே.

சொல் அமைப்பும் ஓசை ஒழுங்குமே கவிதையின் இன்பத்தைத் தரவல்லது எனக் கலைவாதிகள் கூறுவர். அவ்வாறாயின் ஒரு கவிதையின் சொல் அமைப்பு, ஓசை ஒழுங்கு என்பவை அக் கவிதையின் பொருள் இல்லாமலும் தனித்து நிற்குமா? செய்தி இல்லாத சொல் அமைவும், ஓசைச் சீர்களும் கவிதைக்கு சாத்தியமா? அவ்வாறு சாத்தியமாகிலும் அதனைக் கவிதை என்று கூறத்தான் முடியுமா? இத்தகைய கேள்விகள் கலைவாதிகளின் உருவ வாதத்தின் பலவீனங்களை உணர்த்தி விடுகின்றன.

(2) கலை தரும் இன்ப அநுபவமே கலைகளிடத்தில் இரசிகன் எதிர்பார்க்க வேண்டிய



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஒன்று. வேறு ஏதும் பயன்களைக் கலைப் படைப்பில் எதிர்பார்ப்பின் அது கலை அநுபவம் ஆகாது என்பர் கலைவாதிகள். அவ்வாறு யின் உலகப் பொது நியதிக்குப் புறம்பான அதர்மமானதோர் விடயத்தை நியாயப் படுத்தும் உள்ளடக்கம் கொண்ட ஓர் படைப்பை அதன் சமூகப் பெறுமானங்களை தள்ளி வைத்து விட்டு இரசிக்கத்தான் முடியுமா? அவ்வாறு இரசிக்கத் சொல்வதை கலை உணர்வென ஏற்கத்தான் இயலுமா? உதாரணமாக ஓர் ஏழைப் பெண்ணைக் சற்பழித்த ஒரு கொடியவனின் செயலில் இலயித்து அதை ஒரு கவிஞன் கவிதை அனுபவமாக்க முடியுமா? அவ்வாறு ஒரு கவிதை ஆக்கப்பட்டால் கூட அதைச் சமூகம் ஏற்குமா? ஆக ஒரு கலைப் படைப்பு எவ்வளவு தான் கலையின் பத்தைக் தரக் கூடியதான நுட்பங்களைக் கொண்டு இருந்தாலும் அப் படைப்பு சமூக விரோதப் பண்புடையதாக இருப்பின் சமூகம் அதைக் கலைப் படைப்பாகவே ஏற்காது.

(3) அழகே இன்பம் தரவல்லது என்ற கலைவாதிகளின் கருத்தை எடுத்து நோக்குவோம். ஜோன் கீட்ஸ் என்ற ஆங்கிலக் கவிஞனும் அழகு பற்றிக் கூறி உள்ளார். ''அழகிய பொருள் என்றும் இன்பம் தருவது'' என்பார் கீட்ஸ். கலைக்கு அழகு முக்கியமே. ஆயின் இங்கு எது அழகு என்ற கேள்வி எழுகின்றது. ''உண்மையே அழகு'' என்பார் கீட்ஸ். இதையே பாரதி ''வனப்பே உண்மை. உண்மையே வனப்பு'' என்பார். பொய்மை காட்டும் அழகு போலியானது. நிரந்தரம் அற்றது. ஆக கலைப் படைப்பில் அழகைத் தரக்கூடியது அப்படைப்பில் உள்ள உண்மையே ஆகும். கலையின் உண்மை என்பது அதன் சமூகப் பயன்பாட்டோடு தொடர்புடைய ஒன்றே ஆகும். ஆகவே சமூக உண்மைக்கு அப்பால் விலத்தி வைத்து ஒரு கலைப் படைப்பை படைக்கவோ அல்லது இரசிக்கவோ முடியாது.

## கலை சமூகத்திற்கானது-

இலக்கியத்தை சமூகப் பயன் கருதிப்படைக்க வேண்டும் என்பது இக் கோட்பாட்டாளர்களின் கருத்து. கலை இலக்கியம் பற்றி இவர்களுடைய கருத்துக்கள் சிலதை இங்கு காண்போம்.

இலக்கியம் வாழ்க்கையில் இருந்து பிறப்பது. எனவே அது வாழ்க்கைக்கு வழிகாட்ட வேண்டும் என்பது இவர்கள் கட்சி. இக் கருத்தை ஆதரிக்கும் இலக்கிய அறிஞர் சிலரின் கருத்துக்கள் வருமாறு -

''ஒப்பற்ற தத்துவஞானியாக இல்லாதவன் சிறந்த கவிஞனாக இருந்ததில்லை'' என்பார் கோல் ரீட்ஜ் என்ற கவிஞர்.

''சிறந்த கவிஞர் எனப்படுவோர் அவர் கவிதை பிறர் மனதில் தோற்றுவிக்கும் பண்பாட்டைக் கொண்டே முடிவு செய்யப்படுவர்'' என்று எமர்சன் எனும் அறிஞர் கூறுவர்.

''உயிர் வாழ்விற்கு வேண்டிய நல்லொழுக்கத்திற்கு மாறுகப்போதிக்கும் எந்தக் கவிதையும் வாழ்க்கைக்கு எதிராகச் செய்யப்பட்ட கலகமாகும்'' என்பார் ஆர்னல்ட் என்ற திறனய்வாளர்.

மேலே எடுத்துக் கூறப்பட்ட அறிஞர்களின் கருத்துக்கள் எல்லாம் இலக்கியத்தை ஏதோ ஒருவகையில் சமூகப் பயன்பாட்டோடு தொடர்புறுத்துகின்ற கருத்துக்களே ஆகும்.

---

★ நேர்மையான பாதையில் ஏற்படும் சிறு தளர்ச்சியும் கூட ஒழுக்கத்திலிருந்து விலகுவதாகும். தளரா நேர்மைப் பண்பு ஒவ்வொரு மனிதனின் உள்ளத்திலும் உறுதியாய் நிறுத்தப்படவேண்டும். இதனல் மனிதனின் இதயம் முன்னிலும், மேன்மையும் தூய்மையும் அடைகிறது.

**- ஜேம்ஸ் ஆலன்.**

---

நீதிக்கும், அநீதிக்கும் இடையிலான போராட்டம் உலகில் தொடர்ச்சியானது. இதில் இலக்கியம் நீதியின் குரலாக ஒலிக்க வேண்டும். உலகில் போற்றப்படும் இலக்கிய மாமேதைகள் எல்லாம் இத்தகைய நீதியின் குரலாய் தம் இலக்கியப் படைப்புக்களை ஒலிக்கச் செய்தவர்களே என இக் கட்சிக்காரர்கள் வாதிடுவர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எந்த இலக்கியப் படைப்பும் ஏதோ ஒரு செய்தியை வெளிப்படுத்துகின்றன. எனவே கலை வாதிகள் கூறுவதுபோல் இலக்கியச் செய்தியைப் புறக்கணிக்கக்கூடாது. இலக்கியத்தின் ஊடாகப் பரப்பப்படும் செய்தி சமூகப் பயன் தரும் வகையில் இலக்கியங்களின் உள்ளடக்கம் பேணப்படல் வேண்டும். எல்லா இலக்கியப் படைப்புக்களும் கருத்துக்களைப் பிரச்சாரம் செய்யவே செய்கின்றன. எனவே சமூகப்பயன் தரும் கருத்துக்களை பிரச்சாரம் செய்யப்படல் வேண்டும் என்பதும் இவர்கள் வாதம்.

இலக்கியம் தரும் கலையின்பம் என்பது கூட அவ்விலக்கியம் வெளிப்படுத்தும் உள்ளடக்கத்தின் சமூகப் பெறுமானத்தோடு தொடர்புடையதே என்பதும் இக் கட்சிக்காரர்களின் கருத்தாகும், அதாவது ஒரு சமூகத்திற்கு நிகழும் அடக்குமுறைகளை எதிர்த்துப் பாடும் ஒரு கவிதை தரும் கலையுணர்வை அவ் வடக்கு முறையை ஆதரித்துப்பாடும் கவிதையில் காணமுடியாது என இவர்கள் எடுத்துக் காட்டுவர்.

மொத்தத்தில் இலக்கியம் என்பது சமூக வாழ்க்கைக்கும்,சமூகப் போராட்டங்களுக்கும் வழிகாட்டியாக அமைய வேண்டும் என்பது இக் கட்சிக்காரர்களின் வாதம் ஆகும்.

இக் கட்சிக்காரர்களிடையே வெவ்வேறு உட் பிரிவினர்கள் காணப்படுகின்றனர். அறவியல் வாதிகள், மார்க்சிய வாதிகள் ஆகியோர் இவ் உட்பிரிவினருள் குறிப்பிடத்தக்கவர்கள் ஆவர். குறிப்பாக மார்க்சிய வாதிகளே கலையின் சமுதாயக் கொள்கையை உலகளாவிய ரீதியில் எடுத்து வாதிட்டு வருபவர்களில் முதன்மையானவர்கள் ஆவர். தமிழ் இலக்கியப் பரப்பிலும் கலைவாதிகளை எதிர்த்து கடுமையான போராட்டம் நடத்துபவர்களாக இவர்களே காணப்படுகின்றனர். காலஞ் சென்ற பேராசிரியர் கைலாசபதி, பேராசிரியர் வானமாமலை போன்ருேர் இவ் வகையில் குறிப்பிட்டுக் கூறத்தக்க திறனாய்வாளர்கள் ஆவர்.

**இக்கோட்பாட்டின் குறைபாடுகள் :-**

(1) கலைவாதிகள் உருவத்திற்கு முதன்மை அளிக்கப்போய் உருவவாதிகள் ஆகிவிடும் தவறுகளுக்கு எதிராகப் புறப்பட்ட இவர்கள் உள்ளடக்கத்திற்கு முதன்மையளித்தனர். இதனுல் இவர்களுள் சிலர் அதிகமாய் உள்ளடக்கத்திற்கு முதன்மை அளித்து இலக்கியப் படைப்புகளுக்கு இருக்க வேண்டிய அழகியல் பெறுமானத்தின் முக்கியத்துவத்தை உணரத் தவறி விடுகின்றனர். இதனுல் இவர்களின் படைப்புக்கள் சில சமயங்களில் வெறும் சுவரொட்டிகளாய் அல்லது கோஷங்களாய் மிஞ்சி விடுகின்றன.

(2) இலக்கியத் தரம் அற்ற படைப்புக்களைக் கூட வெறும் கருத்துக்களுக்காய் உயர் இலக்கியம் எனப்போற்றும் ஆபத்து இக் கட்சி நோக்கு விமர்சகர்களால் ஏற்படுத்தப் படுவதைக் காண முடிகின்றது.

(3) கருத்துப் பிரச்சாரம் என்ற நோக்கு இக்கட்சிப் படைப்பாளர்களிடையே இருப்பதால் யதார்த்தத்திற்கு சாத்தியம் இல்லாத பாத்திர வார்ப்புக்கள், கதைப் பின்னல்கள் என்பவை இவர்களது படைப்புக்களில் மேலோங்கி இலக்கியம் வெறும் சூத்திரமாகிவிடும் நிலையையும் காணமுடிகின்றது.

இதுவரை கலை கலைக்காக என்ற கட்சிக்காரரினதும், கலை சமுதாயத்திற்கானது என்ற கட்சிக்காரரினதும் கருத்துக்களை தொகுத்து நோக்கினேம். இன்றைய உலக இலக்கியப் பரப்பை எடுத்து நோக்கும் பொழுது கலை பற்றிய சமுதாயக் கொள்கைக்காரர்களின் கையே பல வகையிலும் ஓங்கி வளர்ந்து வருவதைக் காண முடிகின்றது. தமிழ் இலக்கியப் பரப்பிலும் இதனை நாம் கண்டுகொள்ள முடியும். □

---

✠ சிக்கனமாக இருப்பதன் மூலம் சந்தோஷமும் எதிர்காலமும் உறுதி செய்யப்படுவது உண்மை தான். அதைவிட சிக்கனத்தின் மூலம் நிகழ்காலத்தில் நமது சபல புத்தி முற்றிலும் மட்டுப்படுத்தப்பட்டு விடுகிறது என்பதும் கண்முன் நாம் தரிசிக்கும் உண்மையாகும்.

ஸ்கொட் ★



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# முப்பது வெள்ளிக் காசுகள்

மலையாள மூலம்: **ரிஷி ஜோன்** தமிழில்: **வீ. ஆனந்தன்**

கதவு தட்டப்படும் சத்தம் கேட்டு பைபிள் வாசித்துக்கொண்டிருந்த சுசன நிமிர்ந்து பார்த்தாள். கதவிற்குத் தாழ்ப்பாள் போட்டிருக்கவில்லை. பாபு என்ருல் இந்நேரம் கதவைத் திறந்து கொண்டு உள்ளே வந்திருப்பான். சுசன பைபிளை மூடி வைத்துவிட்டு எழுந்தபோது, மீண்டும் கதவு தட்டப்படும் சத்தம் கேட்டது. அவள் சென்று கதவைத் திறந்தாள்.

மங்கிய மாலைநேர வெளிச்சத்தில் கதவின் அருகில் ஒதுங்கி நிற்கும், அம் மனிதரின் முகம் தெளிவாகத் தெரியவில்லை. அந்த மனிதர் கசங்கிக், கிழிந்துள்ள நீண்ட சட்டை அணிந்திருந்தார். அவரின் இரண்டு கைகளிலும் ஏதோ காயம் போலும், கட்டுப் போட்டிருந்த துணியில் இரத்தக் கறை படிந்திருந்தது. அவருக்குக் கிட்டத்தட்ட முப்பது வயதிருக்கும்.

'என்ன வேண்டும்' சுசன கேட்டாள். அவர் ஒன்றுமே பேசவில்லை. எதையோ யாசிக்கும் பாவனையில் அவளைப் பார்த்தார். அப்போதுதான் அவள் அவருடைய கண்களைப் பார்த்தாள். அந்தக் கண்களில் சாந்தமான ஒளி வீசிக் கொண்டிருந்தது, என்ருலும் அவைகள் முதிர்ந்த வயதுள்ளவைகளாகத் தோன்றின. மிக நீண்ட பல நூற்ருண்டுகளாக அனுபவித்து வரும் வேதனை அந்தக் கண்களில் தெரிந்தது.

சுசனைக்கு என்ன செய்வதென்று தெரியவில்லை. 'இங்கு ஒருவரும் இல்லை. இங்கு ஒன்றுமே இல்லை' என்று உரத்த குரலில் சொன்னுள்.

அவள் அந்த மனிதனின் பதிலை எதிர்பாராமல் கதவை பலமாகச் சாத்திவிட்டு மேசைக்கருகில் செல்லும் போது அந்த மனிதர் மெதுவாக நடந்து செல்லும் காலடிச் சத்தம் கேட்டது மிக மெதுவாக நடந்துசெல்லும் சத்தம்.

கதவு திறக்கும் சத்தம் கேட்டு மேசைக்கருகில் இருந்த அவள் நிமிர்ந்து பார்த்தாள். மேசைக்கு மட்டும் வெளிச்சம் தரக்கூடிய அந்த விளக்கின் ஒளியில், கதவைத் திறந்து கொண்டு உள்ளே வருபவரை தெளிவாகப் பார்க்க முடியவில்லை. உள்ளே வந்தவர் கதவிற்குத் தாழ்ப்பாள் போட்டுவிட்டு வந்தார்.

'பாபு! ஏன் இவ்வளவு தாமதம்' கதிரையில் இருந்து எழுந்த வண்ணம் கேட்டாள் சுசன.

'கொஞ்சம் தாமதித்து விட்டேன்' என்று சொல்லிக் கொண்டு வந்தவர் அவளின் எதிரில் நின்ருர். சுசன திடுக்கிட்டாள். வந்தது பாபு அல்ல. தனக்கு ஏற்பட்ட அதிர்ச்சியையும், பயத்தையும் வெளிக்காட்டாமல் அடக்கிக் கொண்டு அவள் உரத்த குரலில் கேட்டாள். 'நீங்கள் யார்? உங்களுக்கு என்ன வேண்டும்?'

அவன் மெதுவாகச் சிரித்தான். காய்ச்சற்காரனின் கண்களைப்போல அவன் கண்கள் இருந்தன. 'எனக்கு ஒன்றும் வேண்டாம்' என்ருன் அவன். அவள் ஒன்றும் பேசாமல் அவனைப் பார்த்தாள். மிக மெதுவாக அவன் கேட்டான். 'கொஞ்ச நேரத்திற்கு முன்பு இங்கு வந்த அந்த பாவப்பட்ட மனிதரின் முகத்திற்கு முன்னுல் ஏன் கதவைச் சாத்தினீர்கள்'.

கோபமும் பயமும் கலந்த

**சிறுகதை**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குரலில் 'அதைக்கேட்க நீ யார்?' என்றாள்.

அவன் ஒன்றும் பேசாமல் அவளையே பார்த்துக்கொண்டிருந்தான்.

பரிகாசம் கலந்த குரலில் அவள் கேட்டாள் 'நான் நினைக்கிறேன் நீயும் அந்த மனிதரைப்போல ஒரு பரதேசியென்று. அவர் உனக்கு நண்பரா?'

'நான் ஒரு பரதேசிதான். ஆனால் அவர் எனது நண்பர் அல்ல' என்ற அவனின் முகத்தில் துயரத்தின் நிழல் படிந்தது. மிகவும் வேதனையான குரலில் மிக மெதுவாக 'ஒரு காலத்தில் நண்பர்களாக இருந்தோம்; ஆனால் இன்று நான் அவருக்குக்கடன்காரன்' என்றான்.

மிகக் கஷ்டப்பட்டு வரவழைத்த கேலிச் சிரிப்புடன் 'உன்னிடமிருந்து கடனை அறவிடுவது என்றால் அந்த மனிதர் மிகவும் கஷ்டப்பட வேண்டிவரும்' என்றாள். அவளுடைய கேலியை அந்த மனிதன் பொருட்படுத்தவில்லை.

'கடனைத் தீர்ப்பதற்குரிய காசு என்னிடம் இல்லை என்று நீங்கள் நினைக்கிறீர்கள்? என்னிடம் காசு இருக்கிறது' என்ற அவன் தனது சட்டைப் பையினுள் கையை விட்டு குலுக்கிக் காட்டினான். பிறகு தனது பையினுள் இருந்த கையை எடுத்து விரித்துக் காட்டினான். அவனுடைய கையில் ஒரு பிடி வெள்ளி நாணயங்கள் மினுங்கின. 'பார்த்தீர்களா?' என்ற அவன் அவளைப்



பார்த்து 'ஜெருசலேத்திலே உரோமன் நாணயச்சாலையில் அடித்த முப்பது வெள்ளிக் காசுகள்' என்று சொன்னான். சுசன வியப்போடு அந்த நாணயங்களைப் பார்த்தாள். அவைகளில் சிலவற்றில் தவிட்டு நிறமுள்ள ஏதோ கறை படிந்திருந்தது. தனது நடுங்கும் விரல் ஒன்றால் சுட்டி 'அது என்ன கறை' என்று கேட்டாள். அவன் விரக்தியாகச் சிரித்தான். 'சந்தேகமாக இருக்கிறதா? அது இரத்தக் கறை. இரத்தத்திற்கு கிடைத்த விலைதான் இந்த முப்பது வெள்ளிக் காசுகளும் இரத்தத்தின் விலை. நம்பிக் கைத் துரோகத்தின் பிரதிபலன். இந்த முப்பது வெள்ளிக் காசுகளும் எனது கைகளில் கிடைத்த நிமிடத்திலிருந்து எனது உலகம் இருண்டுவிட்டது. எத்தனையோ காலமாக இந்த முப்பது வெள்ளிக் காசுகளின் சுமையோடு அலைந்து திரிகிறேன்'.

திடீரெனக் கதவு வேகமாகத் தட்டப்படும் சத்தம் கேட்டு சுசன திடுக்கிட்டாள். ஆனால் அவனோ எவ்வித சலனமுமின்றி நின்று கொண்டிருந்தான். மீண்டும் கதவு வேகமாகத் தட்டப்பட்டது.

'சுசன' பாபுவின் கோபமேறிய குரல் உச்சத் தொனியில் கேட்டது. அவள் கதவருகில் சென்று தாழ்ப்பாளை அகற்றும்போது வெளியில் இருந்து பாபுவின் சத்தம் மீண்டும் கேட்டது. 'நீ என்ன நித்திரை கொள்கிறாயா?'

'இல்லை' என்றாள் அவள்.

கதவைத்தள்ளித் திறந்து கொண்டு வந்தான் பாபு. அவனை உற்றுப்பார்த்தான்.

'உனக்கென்ன நடந்துவிட்டது. குருத்தோலைபோல வெளிறிப்போய் இருக்கிறாய்' என்றான்.

சுசன பாபுவை இறுக்கிக் கட்டிப்பிடித்துக் கொண்டாள்.

'பாபு! அவனை வெளியே அனுப்பு. அவன் என்னைப் பயமுறுத்துகிறான்' என்றாள்.

'யார்' என்று பாபு பரபரப்போடு சுற்றும் முற்றும் பார்த்தான்.

'இங்கே ஒருவருமில்லையே'



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

'இதோ இந்த ஆள்' என்று மேசைக்கருகில் சுட்டிக்காட்டிய வண்ணம் நிமிர்ந்து பார்த்தாள். அங்கு ஒருவரையும் காணவில்லை. அதிர்ச்சியுடன் அறை முழுவதும் பார்த்தாள்; அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை.

'அந்த மனிதன் இப்போது இவ்விடத்தில் தானே நின்றுகொண்டிருந்தான்' என்ருள்.

கதிரையில் சாய்ந்துகொண்டு கால்களை மேசைக்கடியில் நீட்டிய வண்ணம் பாபு சொன்னுன். 'நீ கனவு கண்டிருக்கிருய்'.

ஒரு நிமிடம் சுசன ஒன்றும் பேசவில்லை. பின்பு தயங்கித்தயங்கி அவள் சொன்னுள் 'பாபு அந்தப் பணத்தை கொடுத்துவிடுவோம், நமக்கு தேவையான அளவு பணம் இருக்கிறதல்லவா?'

பாபுவின் முகத்தில் கோபத்தின் சுவாலைகள். கதிரையில் நிமிர்ந்து உட்கார்ந்தான். 'உனக்கு மனம் மாறிவிட்டதா?' கோபத்தில் அவன் குரல் உயர்ந்தது.

'உனக்குத் தேவையில்லாத விசயத்தில் தலையிட்டால் உன்னைக் கொன்றுபோடுவேன்' என்ருன்.

சுசன அவ்விடத்தை விட்டுப் போனபின்பு பாபு மீண்டும் கதிரையில் சாய்ந்து கண்ணயர்ந்தான். அப்போது ஏதோ சத்தம் கேட்டு கண் விழித்தான். தனக்கெதிரில் ஒரு மனிதன் நின்றுகொண்டிருப்பது விளக்கு வெளிச்சத்தில் தெரிந்தது. பாபு கதிரையைவிட்டு பரபரப்போடு எழுந்தான்.

அப்போது 'அவள் சொன்னது சரிதான். நீ இங்குதான் ஒழிந்துகொண்டு இருந்திருக்கிருய். உனக்குத் தருகிறேன் பார்' என்று சேட்டின் கைகளை மடித்துக்கொண்டு அந்த மனிதனுக்குமுன்னே வந்தான் பாபு.

'கொஞ்சம் பொறுங்கள்' அவனிடமிருந்து வந்த குரல் போலில்லாமல் ஏதோ அசரீரி போல ஒலித்தது. பாபு திகைத்து நின்ருன்.

'கொஞ்சம் பொறுங்கள்' என்று அவன் மீண்டும் சொன்னுன். அவனின் குரலுக்குக் கட்டுப்பட்டு பாபு மீண்டும் கதிரையில் அமர்ந்தான்.

'நீங்கள் யார்' என்று பாபு கேட்டான்.

'நான் ஒரு பெரிய போக்கிரி' அவன் அமைதியாகச் சொன்னுன். அவனுடைய கழுத்திலிருந்த தழும்பை வைத்த கண் வாங்காமல் பாபு பார்த்துக்கொண்டிருந்தான்.

'கழுத்திலிருக்கும் தழும்பு என்ன' பாபு கேட்டான்.

கயிறு இறுக்கியதால் ஏற்பட்ட தழும்பு. இன்னும் நீ என்னைத் தெரிந்துகொள்ளவில்லையா?' அவன் பாபுவின் கண்களை உற்றுப்பார்த்தான். 'என்னைத் தெரியவில்லை என்ருல் இதைப்பார்' அவன் சட்டைப் பையினுள் இருந்த தனது கையை எடுத்து விரித்தான். அவனது கையில் வெள்ளி நாணயங்கள் மினுங்கின.

'இதோ பார் ஜெருசலேமில் உரோமன் நாணயச்சாலையில் செய்த முப்பது வெள்ளிக் காசுகள்' பாபு அதிர்ச்சியடைந்தான்.

அந்த மனிதன் சிரித்துக் கொண்டே 'தெரிந்துகொண்டாய் அல்லவா? ஆம், நான்தான் யூதாஸ் காரியோத்து' என்ருன்.

நடுங்கும் குரலில் பாபு கேட்டான் 'உங்களுக்கென்ன வேண்டும்?'

'எனக்கொன்றும் வேண்டாம். நீங்கள் விற்கப்போவதன் விலையை நான் நன்கு அறிவேன். அதுபற்றி உங்களிடம் கொஞ்சம் பேசவேண்டும்'.

'நான் விற்கப்போவதா'

'ஆம், உங்களுடைய ஆத்மா. என்னுடைய ஆத்மாவின் விலைதான் இந்த முப்பது வெள்ளிக் காசுகள்' பாபுவால் ஒன்றும் பேசமுடியவில்லை. அந்த மனிதன் மீண்டும் தொடர்ந்தான்.

'பத்து வருசங்களுக்கு முன்பு ஒருநாள், உங்களு

---

தண்ணீரும் மண்ணும் இல்லாமல் தாவரம் வளரும் என்பதை இஸ்ரேலிய நிறுவனம் ஒன்று நிரூபித்துக் காட்டியுள்ளது. 'பனி' போன்ற பொருள் கம்பியூட்டரால் தெளிக்கப்பட்டு வளர்க்கப்படும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டைய நண்பன் ஒருவன் உங்களிடம் வந்தான். நோய்வாய்ப்பட்டிருந்த அவன் தனக்கு மரணம் அண்மித்துவிட்டதென்றும், தனக்கு பதினெரு வயதுள்ள ஒரு மகன் இருப்பதாகவும், அவன் தனது சொந்தக்காரர்களிடத்தில் வளர்வதாகவும், அவனுடைய எதிர்கால நன்மைக்காகக் கொஞ்சப் பணம் சேர்த்து வைத்திருப்பதாகவும் கூறி, அப்பணத்தை உங்களிடம் தந்தான். தனது மகனுக்கு இருபத்தியொரு வயது நிறையும் அன்று அப்பணத்தை அவனிடம் கொடுக்கும்படியும், உங்களிடம் வேண்டிக்கொண்டான்.'

பாபு ஏதோ சொல்ல வாயெடுத்தான். அவனுல் ஒன்றும் சொல்ல முடியவில்லே.

அவன் மீண்டும் தொடர்ந்தான். 'அந்த நண்பன் தன்னுடைய சொந்தக்காரர்களே விட உங்களே நம்பினன். காரணம் நீங்கள் நல்லவராக இருந்தீர்கள், நம்பிக்கைக்குரியவராக இருந்தீர்கள் நேற்று வரை' அவன் தனது பேச்சை நிறுத்தினன். தன்னுடைய தீட்சண்ணியமான கண்களால் பாபுவைப் பார்த்தான். அவனுடைய பார்வையை எதிர்கொள்ள முடியாமல் தலே குனிந்தான் பாபு.

அவன் பேச்சைத் தொடர்ந்தான். ஆம் நேற்றுவரை. நாளே உங்களுடைய இறந்த நண்பனின் மகனுக்கு இருபத்தியொரு வயது நிறைவுறும் நாள். நேற்று நீங்கள் அந்த நண்பன் தந்த பணத்தை கணக்குப் பார்த்தீர்கள். அவன் தந்த பணத்தை நீங்கள் வட்டிக்குக் கொடுத்திருந்தீர்கள். அது வட்டியும் முதலுமாகப் பெரும்தொகையாக வளர்ந்திருந்தது. அந்த நண்பன் உங்களிடம் தந்த அந்தப் பணத்திற்கு உங்கள் மனேவியைத் தவிர வேறு சாட்சி இல்லே என்பது உங்கள் ஞாபகத்திற்கு வந்தது. அந்தப் பணம் சம்பந்தமாக உங்கள் நண்பனின் மகனுக்கும் எதுவும் தெரியாது என்பதும் உங்களுக்குத் தெரியும். அந்தப் பணத்தை நண்பனின் மகனுக்குக் கொடுப்பதில்லே என்று தீர்மானித்தீர்கள். அத்தீர்மானத்திற்கு ஆதரவாக உங்கள் மனேவியையும் சம்மதிக்க வைத்தீர்கள்.'

பாபு மௌனமாக இருந்தான்.

சுசன மீண்டும் அந்த அறைக்குள் வந்தபோது பாபு தலேயில் கைவைத் வண்ணம் இருந்தான்.

'பாபு' என்முள் சுசன.

பாபு உடனே அவளுடைய கையைப்பிடித்து சுசன, அந்தப் பையனுடைய பணத்தைக் கொடுத்து விடுவோம்' என்முன்.

சுசன ஒரு நிமிடம் ஒன்றும் புரியாமல் நின்முள். அடுத்தநிமிடம் அவள் முகம் சந்தோஷத்தால் மலர்ந்தது.

'ஓ என்னுடைய பாபு' என்று அவனேக் கட்டிப்பிடித்தாள்.

கோயில்மணி ஒலிக்கத் தொடங்கியது. □

---

## உங்கள் கவனத்திற்கு !

உங்கள் சந்தாவைப் புதுப்பித்து விட்டீர்களா? இல்லேயெனில் இன்றே ஆண்டு சந்தாவாக ரூபா 50/- செலுத்திப் புதுப்பியுங்கள்.

பணத்தைக் காசோலேயாகவோ, காசுக் கட்டளேயாகவோ அனுப்பலாம்.

### முக்கிய குறிப்பு!

காசோலேகள், காசுக்கட்டளேகள் ஆசிரியர், தொண்டன் என்ற பெயருக்கே எழுதி அனுப்பப்படவேண்டும்.

- நிர்வாகம்.

---

எந்தத் துறையிலும் வெற்றி பெறலாம். அதற்குத் தேவை மூன்று மட்டுமே. அவை உழைப்பு, சலியாத உழைப்பு, கவனமான உழைப்பு.

- வெப்ஸ்டன்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




## கவிஆரம் ஜோர்!

புரட்டாதித் தொண்டனில் கவிஆரம் வெகு ஜோர். பயமாக இருக்கிறது கவிதை பயங்கரத்தை ஏற்படுத்தாவிட்டாலும் ஒரு சிலரின் மனச்சாட்சிக்கு உறுத்தலாக இருந்திருக்கும். அமிர்தகழியானுக்கு பாராட்டுக்கள்!

ஜே. அருளப்பு
காத்தான்குடி.

## ஐயோ! ஆ!... ஊ!...

தொண்டனே புதிர்போட்டு ஏன் எங்களை சித்திரவதை செய்கிறாய்? ஏற்கனவே உள்நாட்டு வெளிநாட்டுப் படைகளின் சித்திரவதைக்கு உள்ளாகிக் குழம்பிப்போயிருக்கிறோம். கஷ்டமான புதிர்போட்டு மேலும் எங்களைக் குழப்பாதே!

அ. கலிஸ்ரா சுயாஷினி
அம்பாறை.

## ஹலோ வண்டுமணி!

How are you?

என் உடன் பிறவாச் சகோதரனை 'வாயாடி வண்டுமணி'யை ஏன் அடிக்கடி 'மிஸ்' பண்ணுகிறீர்கள்? அடுத்த இதழில் அவரது சுகபலனை அறிய ஆவலாயிருக்கிறேன்.

செல்வி மேபின் மாட்டின்
சொறிக்கல்முனை.

## கண்கெட்டபின்...

ஐப்பசித் தொண்டன் இதழில். உங்கள் பக்கத்தில் 'வருத்தம்...' என்ற தலைப்பில் வந்த பந்தியைப் படித்தேன். 'பிதாவே இவர்களை மன்னியும். தாங்கள் செய்வது இன்னதென்று தெரியாமல் செய்கிறார்கள்' என்ற மனப்பக்குவம் A. S. ஞானப்பிரகாசம் அவர்களது உள்ளத்துக்குக் காலந்தாழ்த்தியே வந்துள்ளது. இதுபோன்று ஏனையவர்களுக்கும் மனப்பக்குவம் உரிய நேரத்தில் வந்திருப்பின் இப்படியான விமர்சனங்கள் பத்திரிகைச் செய்திக்கே வந்திருக்காது.

T. C. கனகரெத்தினம்
வீச்சுக்கல்முனை.



## திடீர்க் கோயில்

ஆஸ்திரேலியாவில் பஸன்டீன் என்ற இடத்தில் ஒரு மாதா கோவில் உள்ளது. இதில் என்ன ஆச்சரியம் என்கிறீர்களா? இளைஞர்கள் நினைத்தால் எதுவும் செய்யலாம் என்பதற்கு இக்கோயில் ஓர் உதாரணம். 1913ம் ஆண்டு ஜனவரி 4ம் திகதி 120 இளைஞர்கள் சேர்ந்து ஒரே நாளில் இதைக் கட்டி முடித்தார்கள். கட்டி முடித்த மறுநாளே பிரார்த்தனைக் கூட்டமும் இதில் நடந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Registered as a News Paper in Sri Lanka.

எமது வெளியீடு !

## நாவண்ணனின்

# பயணம் தொடர்கின்றது

-: முழு நாவல் :-

- தொண்டன் சஞ்சிகையில் 20 மாதங்களாகத் தொடர்ந்து வெளிவந்து வாசகர்களின் ஏகோபித்த பாராட்டுதல்களைப் பெற்ற இந் நூல் முழு நூலாக உங்கள் கைகளில் தவழ வருகின்றது.
- 'தொண்டன்' வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் வெளிவரும் முதல் நாவல் இது. குறிப்பிட்ட பிரதிகளே அச்சாக இருப்பதால் ரூபா 25/- செலுத்தி உங்கள் பெயர்களை உடனே பதிவு செய்யுங்கள்.
- தொண்டன் இதழில் பிரசுரமாகும் தொடர் கதைகள், சிறு கதைகள், கவிதைகள் தொண்டன் வெளியீட்டுத் திட்டத்தின் கீழ் தொடர்ந்து நூலுருவில் வரும் என்பதை வாசக நேயர்களுக்கு அறியத்தருகிறோம்.
- எமது எழுத்தாளர்களை ஊக்குவிக்கவும், அவர்களது ஆக்கங்களை நூலுருவாக்கவும், தமிழ் இலக்கியச் சோலையை மேலும் வளப் படுத்தவும் நாம் தொடங்கவுள்ள வெளியீட்டுப் பணிக்கு வாசகர்களின் முழுமையான ஆதரவை எதிர்பார்க்கின்றோம்.

தொடர்பு :- *ஆசிரியர்,*
*தொண்டன்,*
*சமூகத் தொடர்பு நிலையம்,*
*அ. பெ. எண்: 44,*
*மட்டக்களப்பு.*

*இச் சஞ்சிகை மட்டக்களப்பு ''ஜெஸ்கொம்'' (Jescom) அச்சகத்தில் அச்சிட்டு, தொண்டன் ஆசிரியர் குழுவினரால், 1988-10-29ல் வெளியிடப்பட்டது.*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org